உ

சிவமயம்

ஸ்ரீ மத் அச்சுதானந்த சுவாமிகள் இயற்றியருளிய

சன்மார்க்க தர்ப்பணம்



ஸ்ரீ மத் அச்சுதானந்த சுவாமிகள்

ஸ்ரீ சற்குரு அமலானந்த சுவாமிகளின்
69 ஆம் ஆண்டு குருபூஜை பெருவிழா மலர்

வெளியீடு - 2019
ஸ்ரீசற்குரு அமலானந்த ஞானபீடம், சென்னை – 15.

சன்மார்க்க தர்ப்பணம்

இயற்றியவர்:

ஸ்ரீ மத் அச்சுதாச சுவாமிகள்

வெளியிடுபவர்:

ஸ்ரீ சற்குரு அமலானந்த ஞானபீடம்,
சின்னமலை, சைதாப்பேட்டை,
சென்னை - 15.
அலைபேசி: 98841-35276

பதிப்புரை

உலகில் நாளுக்கு நாள் ஆன்மீகத்தில் ஈடுபடுவோர் எண்ணிக்கை கூடுதலாகிக் கொண்டே வருவதாகத் தெரிகிறது. அவர்கள் தாம் பின்பற்றும் நெறிமுறைகளை ஒழுங்குபடுத்தி சரியான பாதையில் சென்றாலே அறுதியான நிலையை எட்டமுடியும் என்பது சொல்லித் தெரியவேண்டிய ஒன்றல்ல. மிகச் சரியான வழி முறையைக் காட்டுவதாக அமைந்ததுவே வேலூர் மாவட்டம் கீழ்வல்லம் கிராமத்தில் சமாதிகொண்டருளும் மகான் அச்சுதாச சுவாமிகள் இயற்றி அளித்துள்ள "சன்மார்க்க தர்ப்பணம்" என்ற அரிய நூலாகும். உண்மையிலேயே இது அரிய நூல் தான். வேதாந்த மடங்கள், வேதாந்திகள் ஆகியோரைக் கேட்டும் மூலநூல் கிடைப்பது கடினமாக இருந்தது. தேடிக் கிடைத்த ஓரிரு நூல் பயிற்சி செய்யும் அனைவருக்கும் எளிதில் கிட்டி, அவர்கள் பயன் அடைய வேண்டும் என்ற பேரவா காரணமாக இந்நூலைக் குருவருளாலும், இறையருளாலும் பதிப்புக்கு கொண்டுவருவதில் மிக்க மகிழ்ச்சி கொள்கிறோம். முதலில் சிறு தடங்கல் எழுவதாகத் தோற்றம் உருவான போதிலும் அப்பியாசிகளின் பயனைக் கருத்தில்கொண்டே அமலானந்த சுவாமிகளின் குருபூசை பெருவிழாவில் (2.9.2019) வெளியிடுகிறோம். முமுட்சுகள் ஒவ்வொருவரும் பாதுகாத்து, படித்துப் பயன்பெற வேண்டிய நூல் என்பதில் ஐயம் எவருக்கும் எழாது. நூலின் கவிகளுக்குச் சீர்பிரித்து உரையையும் தட்டச்சு செய்து கொடுத்த குடியாத்தம் வேதாந்த சபை திரு P.C.இராமலிங்கம், மற்றும் அணிந்துரை வழங்கி எங்களை ஊக்குவித்த சென்னை வேளச்சேரி தவத்திரு.பெருவெளிராமன் K. வெங்கட்ராமன் சுவாமிகளுக்கும் நன்றியை உரித்தாக்கு கின்றோம். யோகம், ஞானம் இரண்டு மார்க்கங்களையும் ஒப்பிட்டு நன்னெறியினைக் காட்டும் இந்த நூலை முமுட்சுகள் ஆழப் படித்து பயன்பெற வேண்டுகிறோம்.

சின்னமைலை,
சைதாப்பேட்டை, சென்னை-15
அலைபேசி: 98841-35276

M.மேகநாதன்,
ஸ்ரீ சற்குரு அமலானந்த
ஞான பீடம்,

முகவுரை

ஆன்மீகப் பயணத்தில் கடைசி நிலையான பிறப்பு இறப்பு இல்லாத நிலையை அடைய உலகில் உள்ள மாந்தர்கள் ஒவ்வொரு வழிமுறையைப் பின்பற்றுகின்றனர். கடைப்பிடித்து செல்கின்ற வழிமுறை சரியானது தானா? யோகத்தில் செல்வது சரியா? ஞான மார்க்கத்தில் செல்வது சரியா? இதற்கெல்லாம் விடை சொல்லும் முகத்தான், மகான் அச்சுதாச சுவாமிகள் "சன்மார்க்க தர்ப்பணம்" என்ற நூலினை இயற்றி அளித்துள்ளார். இதன் பொருள் 'நல்வழிக் கண்ணாடி' என்று சொல்லலாம். கண்ணாடியில் பார்க்கும் போது, முகத்தில் உள்ள அழுக்கு, கறை தெரிகின்றன. அந்த பிரதிபிம்பத்தைப் பார்த்து நம்முடைய முகத்தைச் சுத்தப்படுத்திக் கொள்கிறோம். அதைப் போல், நாம் பின்பற்றும் மார்க்கம் சரியானதாக இருக்கிறதா என்பதைக் கண்ணாடி போல் காட்டிக் கொடுப்பது இந்த அற்புதமான நூல். மகான் அச்சுதாசர் யோகத்திலும் ஞானத்திலும் வல்லவர். மாயையினை வென்றால் தான் கடைசி நிலை என்பதைச் சுட்டிக் காட்டி அதற்கான தெளிவான வழியையும் காட்டியுள்ளார். இந்நூலின் பாக்களுக்கு உரையையும், இலக்கணம் வழுவாமல் பாக்களின் சீர் பிரித்தும், தட்டச்சு செய்தும் அளிக்கின்ற பணியினைச் சிறியேனிடம் அளித்தமைக்கு, வெளியிடும் சென்னை சைதாப்பேட்டை சின்னமலை அமலானந்த சுவாமி பீடம் தவத்திரு ஸ்ரீதர் சுவாமிகளுக்கு எக்காலத்தும் நன்றிக் கடன்பட்டவன் ஆவேன். இவர் வேதாந்தத்தில் நன்கு பயிற்சி பெற்றதோடு நிற்காமல், வேதாந்த நூல்கைளப் பதிப்பித்தும் வருகின்றார். இந்நூலினைப் பதிப்பித்து வெளியிடுபவர் "*ஏராரும் அச்செழுத்தில் பதிப்பிப்போரும் இணையறு மார்க்கண்டனைப் போல் இனிதாய் வாழ்வர்*" என்று அச்சுதாச சுவாமிகளே வாழ்த்தியுள்ளார். அதன்படி அன்னார் வாழ்வில் உடல் நலமும், மனநலமும், பல வளமும் ஓங்கி மேன்மேலும் அரிய நூல்களைப் பதிப்பிக்க இறைஅருளும் குருவருளும் துணைபுரிவதாக.

P.C.இராமலிங்கம்,
வேதாந்த சபை,
குடியாத்தம்-632602,
வேலூர்மாவட்டம்.
99409-27133.

அணிந்துரை

ஸ்ரீ சம்பத்கிரி பிரம்ம பீடம் பிரம்ம ஸ்ரீ அச்சுதாச சுவாமிகள் அவர்கள் இயற்றியருளிய "சன்மார்க்க தர்ப்பணம்" என்னும் இவ்வரிய நூல் அவருடைய சீடருக்கும் சீடரான ஸ்ரீமத் அமலானந்த சுவாமிகளின் 69-வது குரு பூஜை விழாவில் 2-9-2019 அன்று, ஸ்ரீ சற்குரு அமலானந்த பீடத்தாரால் சென்னை சைதாப்பேட்டையில் வெளியிடப்படுகிறது.

ஸ்ரீ அச்சுதாச சுவாமிகள் சரியை, கிரியை, யோகம் ஆகிய படிகளை முன்னோர் விதித்த வழியில் முறையே கடந்து தனது ஞானகுரு ஸ்ரீ நிஜானந்தரிடம் ஞானோபதேசம் பெற்று, சொருப ஞானம் கைவரப்பெற்று, அத்வைதானந்தத்தில் மூழ்கித் திளைத்தவர். தன் சுவானுபவங்களை எல்லாம் சுமார் 300-க்கும் மேற்பட்ட அத்வைத கீர்த்தனைகள் வாயிலாக வாரி வழங்கியவர். தன் மண்ணுலக வாழ்வின் இறுதியில் "சன்மார்க்க தர்ப்பணம்" என்னும் இஞ்ஞானப் பனுவலை இயற்றி தன்னை அறிய விழையும் வேதாந்த மாணவர்களுக்கு ஒரு கைவிளக்காக அளித்துச் சென்றுள்ளார்கள்.

பாயிரம் ஐந்து பாடல்களோடு ஆசிரிய விருத்தப்பா வடிவில் அமைந்த 78 பாடல்களைக் கொண்டு அமைந்துள்ளது இந்நூல். கற்போருக்குக் களிபேருவகை ஊட்டுவது, கருத்தாழம் மிக்கது. கருத்துகள் எளிய நடையில் உவப்பூட்டும் உவமை களோடு உலாவருவது. இது உள்ளத்தைக் கவர்ந்து உண்மையை உணர வைப்பது எனின் அது மிகையாகாது.

'ஞானாத் மோட்ச:' என்பது முடிந்த முடிபு. அதாவது ஞானத்தினால் மட்டுமே மோட்சம். மோட்சம் என்பது சம்சார பந்தத்திலிருந்து விடுதலை அடைவது என்பது ஆகும். அவ் விடுதலை என்பது அகத்திலும், புறத்திலும் எதனையும் சாராது, தன்னை உணர்ந்து தன்னில் தானே இன்புற்று, நித்திய பேரின்பத்தில் நிலைநின்று, இவ்வுலகில் வாழும் ஆனந்த வாழ்க்கை ஆகும். இந்நித்திய ஆனந்த வாழ்க்கை என்பது காணப்படும் உலகுக்கும் தான் உள்ளிட்ட உயிர்களுக்கும் ஆதாரமாக, உபாதான காரணமாக (விவர்த்தோபதானமாக

மட்டுமே) உள்ள, வேதங்களில் பிரம்மம் என்று அழைக்கப்படும் தத்துவமாகிய அப்பூரண மெய்ப்பொருள் தன்னிலும் வேறன்று என்று தன்னையுணர்ந்த சற்குருவின் உபதேசத்தால் தடுமாற்ற மின்றி பெறப்படும் ஞானத்தினால் மட்டுமே சாத்தியம் ஆகும்.

இந்த ஞானம் அடையப்பட்டு பின்னர் ஏகாந்தமாக ஆலோசிக்கும் பொழுது, இது தன் இயல்பே யன்றோ என்று உணர்ந்த நிலையில், 'இதை அடையவா இவ்வளவு சிரமப் பட்டோம்' என்று வியக்கும் அளவிற்கு அது மிக எளிதாகத் தோன்றினும், விவேகம், வைராக்யம், சமதமாதிகள், விடுதலை வேட்கை ஆகிய சாதனங்கள் நிறைந்தோர்க்கும் மற்றும் கேட்டல், சிந்தித்தல், தெளிதல் ஆகிய மூன்றையும் முறையாய்ப் பயின் றோர்க்குமன்றி மற்றோர்க்கு இந்த ஞானத்தின் அடைவு என்பது குதிரைக் கொம்பே ஆகும்.

'சன்மார்க்க தர்ப்பணம்' என்னும் இந்நூல் குரு சிஷ்ய சம்பாஷனை வடிவில், மோட்சத்தின் தன்மையைத் தெளிவாகக் கூறுவதோடு அதனை அடைவதற்கான சத்தான சத்துக்களால் அநுஷ்டிக்கப்பட்ட மார்க்கத்தையும், வாழ்வில் அன்றாடம் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் பற்றியும், கண்ணாடி போல் தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறது. சத்சங்கத்தின் பெருமை, துற் சங்கத்தின் கேடு, வேதம் விதித்த கர்மங்கள் யார் யாருக்குத் தேவை, சித்திகளால் மோட்சம் சித்திக்காது என்பன போன்ற வற்றைப் பற்றியும், இராம பக்தியின் மேன்மையைப் பற்றியும் இந்நூல் கூறுகிறது. இந்நூலை முற்றிலும் ஓதி இன்புற ஊக்குவிக்கும் முகத்தான் இதனுள் அமைந்துள்ள சிறப்பான சில கருத்துகளை எடுத்துக் காட்டுவோம்.

1. அவையடக்கமாக இந்நூலைப் பற்றி ஆசரியர் கூறும்போது, உவர்க்கடல் முழுவதையும் உண்டு உமிழ்ந்த அகத்தியற்கு அக் கடலினின்றும் ஒரு குவளை நீரை எடுத்துக் கொடுப்பது போல் உள்ளது இந்நூல் என்கிறார்.

2. பெரியோர்களின் நேசமதால் துறவும், துறவினால் மாயையின் ஒழிவும், அவ்வொழிவில் மெய்ஞானத்தின் உறவும், அவ்வுறவினால் மோட்சத்தின் பேறும் அடையலாம்.

3. முத்தி எனும் நன்னிலத்தை சென்றடைய சத்தியம், பொறுமை, நிராசை. சமம், தமம் என்னும் படிகளில் ஏறியே சென்றடைதல் கூடும். சத்சங்கத்தின் துணையின்றி இப்படிகளில் ஏற இயலாது.

4. மூவாசைகளை முற்றிலும் ஒழித்தல் வேண்டும். அவ்வாறு ஒழிக்கும் போது புத்திர ஆசையும் நீங்குவதால் சாத்திரம் விதிக்கும் முக்கடன்களில் மூன்றாவதான பிதிர்க்கடனை எவ்வாறு நிறைவேற்றுவது என்று கேட்பின், 'பிரியமாய்ப் பெற்றெடுத்த பிதாவிற்கு செலுத்த வேண்டிய கடன், துரியாதீதமாய்த் துலங்கும் தன் சொரூபத்தைத் தரிசிக்கும் போது தானே கழிந்தொழியும்' என்கிறார்.

5. புத்திரப்பேறு இல்லார்க்கு நற்கதி இல்லையென்று நல்லோர் கூறும் வாக்கின் கருத்து யாதோ வென்று சீடன் வினவ, எதிர் வினாவாக ஆசாரியன், நூற்றுவரைப் பெற்றெடுத்த திருதராட்டிரன் (மகாபாரதம்) என் கண்டான் நன்மை என்று வினவி நல்லறிவு (ஆத்ம ஞானம்) பெறுவதே நற்புத்திரப்பேறு என்று கூறுகிறார்.

6. அனைத்து அனர்த்தங்களுக்கும் வித்தாக விளங்கும் உடல் பற்றினை எவ்வாறு நீக்குவது என்று சீடன் வினவ, 'தேகத்தில் பொலியா நிற்கும் தேகியான ஆத்மாவை தரிசித்தால் அன்றி தேகத்தின் மீதான பற்று ஒருக்காலும் நீங்காதென்றும் மற்றும் அப் பற்றுநீங்க அந்த தேகமானது ஒரு மல மூத்திர பாண்டம் என்னும் உண்மையைச் சதா ஓர்வது ஒன்றே வழி' என்றும் கூறுகிறார்.

7. மூவாசையையும் முற்றும் துறந்த பின்னர் காட்டில் வாழ்வது சரியா அல்லது வீட்டில் வாழ்வது சரியா என்னும் சீடன் வினா விற்கு, முன்வினையின் முகிழ்வான் பிராரர்த்தம் முன் செலுத்தும் வழி காடாயினும் வீடாயினும் அது ஞானியர்க்கு சமமே என்று விடை பகர்கின்றார் ஆசிரியர்.

8. 'எவ்வுயிரையும் தம்முயிர் போல் எண்ணி அவர்கள் பக்குவத்திற் கேற்ப அருள் வழங்கும் திருமால், சிவன், சக்தி ஆகியோர் மீது பக்தியில்லாமல் செய்யும் வேள்விகள் அனைத்தும் அமுதம் நிகர் கங்கை நீரைக் கொண்டு பன்முறை கழுவினும் மதுவின் மணம்

மதுக்குடுவையினின்றும் நீக்க இயலாது நிற்பது போலப் பயனில் வினைகள் ஆகும்' என்கிறார்.

9. ஓம் நமோ நாராயணாய என்னும் எட்டெழுத்து மற்றும் ஓம் நமசிவாய என்னும் ஐந்தெழுத்து நாமங்களின் சாரமான 'ராம' என்னும் நாமத்தினை ஓதி நிட்டை புரிவோர்க்கு அரிய சித்தி களும் முத்தியும் உண்மையிலேயே கைகூடும் என்றும், பஞ்சமா பாதகங்கள் புரிந்தோர் ஆயினும் ராம நாமம் ஓதுவதால் தங்கள் பாவத்தினின்றும் நீங்குவர் என்றும் ராம நாமத்தின் பெருமையைப் பலபடப் பேசுகிறார். மேலும் இந்நாமத்தின் பெருமைகளை அறியாமல் ஓதினாலும் பயனுண்டோ என்னும் வினாவினை எழுப்பி, ஈன்ற தாயின் முலைப்பாலை சேய் அப் பாலின் பெருமையை அறியாது உண்டிடின் அதன் பசி அடங் காதோ என்னும் எதிர்வினாவினையே விடையாகப் பகர்கின்றார்.

10. அழிந்தொழியும் உடம்பினை யான் அன்று என்று நீக்கி உள்ளுறையும் ஆன்மாவே தான் என்று இனிது காண்டலே ஞானமாம் என்றும் அதனை அடைந்தோர் எத்தொழில் செயினும் துன்பம் உறார் என்றும் கூறுகிறார்.

11. எல்லா இடத்திலும் எல்லா காலங்களிலும் சித்தாகவே விளங்கும் அப்பேரறிவே நான் மற்றும் நீ, அவன், அவள், அது என்பதாகவும், மற்றும் அசையும் அசையா அனைத்துப் பொருட் களாகவும், அதுவே விளங்குகின்றது என்னும் நிச்சய அறிவே வேதாந்தத்தின் சாரம். இவ்வுண்மை யறியாது செய்யும் கர்மங்கள் அனைத்தும் சாம்பலில் பெய்த நெய் போலாகும் என்கிறார்.

12. இவ்வுண்மையறியாது எத்தனை நூல் படித்தாலும், படித்த நூலைப் பல்லோர்க்கும் விரித்தாலும், தீர்த்தங்கள் ஆடினாலும், சிலைகளை வழிபட்டாலும், இல்லினைத் துறந்து துறவு மேற்கொண் டாலும், கானகம் புகுந்தாலும், சடாமுடி தரித்தாலும், தான, தவங்கள், வேள்விகள் செய்தாலும் மாயையின் பிடியில் இருந்து விடுபடமுடியாது. இச்செய்கைகளால் உண்டாகும் பயன் தான் என்னவெனில், புண்ணிய லோகம் புகுந்து சிலகாலம் போகங் களைப் புசித்து மீண்டும் மண்ணிற்கே வருதலே பயனாகும்.

13. நீரும் பாலும் கலந்து வேறுபாடின்றி ஒன்றாகத் தோன்றுவது போல் ஆகாயம் போல் மாறுபடா ஆன்மாவும் மேகம்போல் மாறுபடுகின்ற இந்திரியக் கூட்டங்களும் சேர்ந்து அறியாமை வசப் பட்ட மாந்தர்க்கு ஒன்றாகவே தோன்றுகின்றது. அன்னம் பாலை மட்டும் பிரித்து அருந்துவதுபோல், ஞானியர் தேகத்தை நீக்கி எஞ்சிய ஆன்மாவில் திளைத்திருப்பர். கழுகு போன்ற அஞ் ஞானியர் பிரித்தறிய இயலாது போகங்களைப் புசித்து மாள்வர்.

14. நீரின் மேல் குமிழி போல் நிலையற்ற இத்தேகமானது அநித்தியம் என்னும் உண்மையை ஓராது பல்வேறு சித்திகளை விரும்பி அல்லல் உறுவோர், சிறப்பு மிக்க காற்றினை பொத்தல் சீலையில் கட்டி ஓரிடத்தில் அது அழியாது இருக்க வேண்டும் என்று நினைத்து ஒளித்து வைத்தலுக்கு ஒப்பாகும்.

15. முடிவாகக் கூறுகிறார்: 'ஆயிரம் உரைத்தும் என்ன பயன்? அனைத்தையும் பொய்யெனத் துறந்தவர்களே அந்தணர்களாம். மாயையில் தோன்றுகின்ற இவ்வுலகம் பறைச்சேரிக்கு நிகராம். ஆகவே ஞானிகள் எதன் மகிமையை யாரிடம் சென்று புகழ்பெறக் காட்டுவர். வாயினைத் திறவாது மௌனமாக ஆனந்தாதீத வாழ்வினில் ஆழ்ந்திருப்பதே சாலச் சிறந்தது.'

எங்கோ சிலரிடம் அடைந்து கிடைந்த இவ்வரிய நூலை நாம் அனைவரும் ஓதியுணர்ந்து உய்யும் வகையில் பதிப்பித்து வெளியிடும் ஸ்ரீசற்குரு அமலானந்த பீட அன்பர்கள் திரு மேகநாதன் சுவாமிகள், ஸ்ரீதர் சுவாமிகள் மற்றும் அனைவரும் எளிதில் கற்றுணர்வதற்கு ஏதுவாக சீர் பிரித்து சிறப்பாக ஓர் பொழிப்புரையும் வரைந்தளித்துள்ள குடியாத்தம் திரு பி.சி. ராமலிங்கம் சுவாமிகள் அனைவரும் நம் நன்றிக்கும் குருவருளுக்கும் திருவருளுக்கும் உரியோராவர்.

அனைவர்க்கும் பரம்பொருள் தன்னைக் காட்டிக் கொடுப்பதாக.

சென்னை.
18-8-2019

பெருவெளிராமன்,
நன்னிலம் ஸ்ரீதாண்டவராய
சுவாமிகள் கைவல்ய நவநீத
ஞானப் பெருமன்றம்.

சன்மார்க்க தர்ப்பணம்

பாயிரம்

(வெண்பா)

சின்மாத் திரமாத் திகழ்ந்(து)உல(கு)உய்ய வான்விரும்பிச்
சன்மார்க்க தர்ப்பணநூல் சாற்றுதற்கு – வன்மாயா
காரியங்கள் நீத்(து)அகண்டா காரசிவ மா(ய்)இலகும்
ஆரியன்தாள் தாமரைகாப்(பு) ஆம்.

அறிவு வடிவமாகிய ஆத்மாவை உணர்ந்து உலக மாந்தர் (சீரிய வழிமுறைகளை அறிந்து) உய்வதற்காகச் சன்மார்க்க தர்ப்பணம் என்னும் இந்த நூலினை இயற்றுவதற்கு, தன்னை அறியவொட்டாமல் மயக்குகின்ற மாயையின் காரியங்களான தேகம், புலன்கள், மனம், புத்தி இவைகள் (நேதி களைதல் மூலம்) தான் அல்ல என்று தள்ளி, அகண்டாகார பிரம்மமே தானாக விளங்குகின்ற ஆசாரியன் தாமரை மலர்ப்பாதங்கள் காப்பாக அமைக.

***

(கலிவிருத்தம்)

எதி(ர்)எது(ம்) இலா(து) இல(கு)இன் பமுறும்
கதிகாட் டியஎன் இருகண் மணியாம்
துதிசேர் இறைவன் துகள்தீர் அடியெம்
மதிசேர வணங்கி வழுத்துதுமால்.

தன்னைத் தவிர தனக்கு எதிராக மற்றொரு பொருள் இல்லை என்று உணரும் நிலையே பேரானந்தம் என்பதைக் காட்டி அருளிய, எனது இருகண்மணிகளைப் போன்றவராம் புகழ் மிக்க இறைவனது தூய திருவடிகளைப் புத்தியில் இருத்தி வணங்கித் துதிசெய்வாம்.

***

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

ஆதிநாள் இமையோர் ஏத்த
அயோத்திமா நகரில் மேவிக்
காதிசெய் மகத்தைக் காத்துக்
கல்லைநல் அரிவை ஆக்கித்
தீதிலா(து) உவரி தாண்டித்
தெவ்வரைச் செகுத்(து)அ கண்ட
சோதியாய் இலங்(கு)இ ராமன்
துணைஅடி முடிமேல் கொள்வாம்.

முன் ஒரு காலத்தில் தேவர்கள் வேண்டியதற்கு ஏற்ப அயோத்தி மாநகரில் அவதரித்து, விசுவாமித்திர முனிவர் செய்த யாகத்தைக் காத்து, கல்லாக மாறிய அகலிகையைச் சாப விமோசனம் அளித்து பெண்ணாக்கி, முறைமை தவறாது சமுத்திரத்தைக் கடந்து பகைவர்களை வென்று எங்கும் நிறைந்த சோதியாக விளங்கும் இராமபிரானின் இரு திருவடிகளைத் தலைமேல் கொள்வாம்.

***

(எண்சீர் ஆசிரிய விருத்தம்)

உத்தமமாம் சதுர்மறையின் முடிவாய் ஓங்கும்
ஒருமொழியின் மருமமதாய் உயர்ஒப் பில்லா
நித்தியமாக் கருணைமழை பொழிந்(து)எங் கெங்கும்
நிறைந்(து)அனைத்தும் அறவிழுங்கி நிலவும் விண்ணாய்
அத்துவி(த)ஆ னந்தர(ச)அம்புதியா நீநான்
அவ(ன்)அவ(ள்)அ:(து)என(ல்)அற்(று)அ றிவாகநின்றோர்
சித்தமெலாம் தன(து)உருவாக் கரைத்(து)ஆட் கொள்ளும்
சிதாகாய தேவதையைச் சிந்தை செய்வாம்.

நன்மையைத் தரும் நான்கு வேதங்களின் முடிவாக விளங்கும் மகா வாக்கியங்களின் உட்பொருளாகவும், உயர்ந்த நிகரிலாத நித்தியமான பொருளாகவும், கருணை மழை பொழிந்து எல்லாவிடத்தும் நிறைந்து அனைத்தையும் தன்னுள் அடக்கித் திகழும் ஆகாய வடிவமாகி, இரண்டற்ற அத்துவித ஆனந்தக் கடலாகி, நீ, நான், அவன், அவள், அது, இது என்னும் பேதங்கள் இல்லாமல் அறிவு வடிவாகத் திகழ்பவர்களின் சித்தத்தை எல்லாம் தனது வடிவமாகி கரைத்து ஆட்கொள்ளும் சிதாகாய தேவனைச் சிந்தையில் வணங்குவாம்.

***

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

சாகர சலம்எ லா(ம்)ஆ
சமனமாக் கொடுவி டுத்த
மோக(ம்)இல் அகத்தி யற்(கு)ஓர்
மொந்தைநீர் அதில்தந் தால்போல்
ஊக(ம்)இல் எளியேன் எல்லாம்
உணர்ந்தவர் உரையே இந்நூல்
ஆகஇங்(கு) உரைப்ப(து) அல்லால்
அன்னியம் என்னல் ஆமோ.

கடல் நீர் முழுவதையும் குடித்து, பின்பு வெளியே உமிழ்ந்த ஆசையில்லாத அகத்தியருக்கு, அவர் வெளிவிட்ட நீரிலிருந்து ஒரு குடுவை நீரினை முகந்து குடிக்க கொடுப்பதைப் போலக் கருத்து ஒன்றும் அறியாத எளியேன் அனைத்தும் அறிந்த பெரியோர்கள் மொழிந்தவற்றை இங்கு நூல் வடிவாய் உரைப்பது அல்லாமல் (இந்நூல்) வேறான ஒன்று எனக் கூறலாமோ?

***

நூல்

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

திருவருள் கடலாய் எங்கும்
செறிதரும் பொருளே ஆசான்
உரு(வு)எடுத்(து) எனைஆட் கொள்வான்
உகந்(து)இவண் உறையும் தூயோய்
அருமறை அறைதற்(கு) ஒண்ணா
அமலவீ(டு) அடைவோர் அன்பாய்
மருவுநல் சாத னங்கள்
மகிழ்வுடன் அருள்செய் வீரே. (1)

(சீடன் கேட்டல்) திருவருள் கடலாக எங்கும் நிறைந்த பொருளே! அடியேனை ஆட்கொள்வதற்காக உளம்கனிந்து ஆசாரியராக வடிவம் எடுத்து இங்கு திகழ்கின்ற தூயவரே! அருமையான வேதங்களாலும் சொல்வதற்கு இயலாத மாயை முதலான மலமாகிய அழுக்கு இல்லாத முத்தியை அடைய விருப்பம் உடையவர்கள் பயிற்சி செய்கின்ற சாதனா முறைகளை மகிழ்வுடன் அருளிச் செய்வீராக. (1)

***

(எண்சீர் ஆசிரிய விருத்தம்)

பெரியவர்கள் நேசமதால் துறவாம் அத்தால்
பிரமைக(ள்)எல் லாம்ஒழிவு பெறும்அப் பேற்றால்
அரியமெய்ஞ்ஞா னோதயம்ஆம் அதனால் மோக்கம்
அடைந்திடலாம் எனமுனம்தம் அடியார் உய்யப்
பரிவுடனே மஞ்சரிகா தோத்தி ரத்தில்
பகையறுசங் கரகுரவன் பகர்ந்த வற்றால்
விரிபுகழ்ஆர் அறிஞரது சகவா சத்தை
விடாப்பிடியாய் அனவரதம் மேவல் வேண்டும். (2)

(ஆசாரியர் அருளல்) பெரியோர்களின் நட்பால் (மனத்) துறவும், அந்த துறவினால் மயக்கத்தைத் தரும் அஞ்ஞானம் நீங்குதலும், அதனால் அரிய மெய்ஞ்ஞானம் உண்டாவதும், அதனால் மோட்சமும் அடையலாம் என்று முன்பு தமது அடியவர்கள் உய்வு பெற சங்கராச்சாரியார் மஞ்சரிகா தோத்திரத்தில் அருளியுள்ளார். அதனால், தத்துவஞானம் உணர்ந்த பெரியோர்களின் சத்சங்கத்தை (தொடர்பினை) என்றென்றும் விடாமல் பிடித்துக் கொள்ளல் வேண்டும். (2)

***

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

எறிந்(து)அலை கொழிக்கும் அருந்திரி பதகை
எழில்நிலா சுரதரு மூன்றும்
செறிந்ததீ வினையும் வெம்மையும் மிடியும்
தீர்க்கு(ம்)இவ் உலகவாழ்(வு) அனைத்தும்
துறந்தமெய்ஞ் ஞானத் தூயர்தம் சேவை
சொற்றஇம் மூன்றையும் அகற்றும்
அறிந்(து)இதை அவர்பால் அணுகிநல் மோக்கம்
அடைந்திடற்(கு) ஐயமும் உளதோ. (3)

வீசுகின்ற நீர் அலைகளால் வளம் கொழிக்கச் செய்யும் கங்கைநதி, அழகிய நிலவு, கற்பக மரம் ஆகிய மூன்றும் முறையே அவைகளை அணுகியவர்களுக்கு மிகுந்த தீவினைகளையும், வெப்பத்தையும், வறுமையையும் நீக்கும். (அதே போன்று) உலக வாழ்வினைத் துறந்த தூய ஞானிகளின் அருளானது மேற்கூறிய தீவினை, வெப்பம், வறுமை ஆகிய மூன்றினையும் அகற்றும் என்பதை அறிந்து அவரை அணுகியிருந்து மேலான மோட்சம் அடையலாம் என்பதில் சந்தேகமும் உளதோ? (3)

***

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

சத்தியம் பொறைநி ராசை
சமம்தமம் இவைகள் மேலாம்
முத்திநன் னிலத்தைச் சேர்க்கும்
முக்கிய சோபா னங்கள்
ஒத்திடும் இவைஇன் றாயின்
உயர்கதி இன்றாம் சற்சங்
கத்தியம் இன்றேல் ஆர்க்கும்
கழறும்முன் னவைஇன் றாமே. *(4)*

சத்தியம், பொறுமை, பற்றின்மை, மனம் புத்தி முதலான அகக்கரணம் மற்றும் கண், காது முதலான புறக் கரணம் இவைகளைத் தேவையற்ற விஷயங்களில் செலுத்தாமை ஆகியவை முத்தியாகிய இடத்தில் கொண்டு போய்ச் சேர்க்கின்ற முக்கியமான படிகளாகும். இவைகள் கைவரப் பெறாவிடின் எவர்க்கும் உயர்ந்த நற்கதி வரப் பெறாது. தத்துவ ஞானத்தைத் தரவல்ல பெரியோர்களின் சத்சங்கத் தொடர்பு இல்லாவிடில் எவரிடத்தும் மேற்கூறிய பற்றின்மை, கரணத்தூய்மை முதலியவை வராது. (4)

***

(எண்சீர் ஆசிரிய விருத்தம்)

எவ்விடத்தில் இவ்விதமாம் குணங்கள் மேவும்
ஈச(ன்)அடி யார்இனிதாய் இலங்கா நிற்பர்
அவ்விடத்தில் இந்திரையும் திருமால் ஆதி
அமரர்களும் பிரிய(ம்)உடன் அமர்ந்து வாழ்வர்
கவ்விடுநோய் அங்கிபயம் கிரக பீடை
கருதருஉற் பாத(ம்)எலாம் கனலில் பஞ்சாம்
செவ்வியஅவ் விடம்அருணை காசி காஞ்சி
சிதம்பரமாம் அங்(கு)உளநீர் சிரேட்ட நீரே. *(5)*

மேற்கூறிய குணங்களை உடைய இறை அடியார் மகிழ்ச்சியாக இருக்கின்ற அந்த இடத்தில் சீதேவி, திருமால் முதலாக தேவர்களும் பிரியமுடன் வசிப்பார்கள். பற்றுகின்ற நோயும், நெருப்பு பயமும், கோள்களினால் வரும் துன்பமும், பிறவியைத் தரக்கூடிய மற்ற துன்பங்களும் நெருப்பில் இட்ட பஞ்சினைப் போலாகும் (எரிந்து அழிந்து விடும்). அந்த சிறந்த இடமானது திருவண்ணாமலை, காசி, காஞ்சி, சிதம்பரம் என்ற தலங்களுக்கு நிகராகவும், அங்கு இருக்கின்ற தண்ணீர் சிறந்த தீர்த்தமும் ஆகும். (5)

***

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

தெருளுடை அடியார் அடியினை முடிமேல்
திகழு(ம்)ஆ பரணமாக் கொளி(ன்)அ:(து)
இருள்நிகர் அலைக்கு மாயையாம் பௌவம்
எளிதி(ல்)நீக் கிடும்பெரும் புணையாம்
பொருள்தனை ஈட்டித் தனுகர(ண) ஆதி
பொய்யெலாம் மெய்எனாப் பொருந்தி
மருளையே தவமாக் கொளின்உனைக் கெடுப்ப
மற்று(ம்)ஓர் மருவலன் உளனோ. *(6)*

அறிவில் தெளிவுடைய அடியார்களின் திருவடிகளைத் தலைமீது ஆபரணமாகச் சூடிக்கொண்டால் அது இருள் போல அலைக்கழிக்கும் மாயை என்ற கடலை எளிதில் தாண்டிச் செல்வதற்கு உதவிடும் படகாகும். இதைவிடுத்து அழிகின்ற பொருளைச் சம்பாதித்து, பொய்யான உடல் கரணம் இவைகளை 'நான்' என்று கருதிக்கொண்டு இந்த பிராந்தியே தவம்போன்றது (தவம்போல் செய்யத் தக்கது) என்று நினைத்திருந்தால் உன்னைக் கெடுப்பதற்கு இதனைக் காட்டிலும் வேறு ஒரு பகைவன் இருக்கின்றானோ? (6)

***

(கலிவிருத்தம்)

ஞானி என்று(ம்)அஞ் ஞானிஎன் றும்பிரித்(து)
ஆன பேரைஎவ் வா(று)அறிந்(து) எய்துவேன்
ஊன மா(ம்)உடல் ஓம்பித் துயர்உறும்
தீன னேற்குத் தெளிவுறக் கூறுவீர். *(7)*

(சீடன் கேட்டல்) ஞானி, அஞ்ஞானி என்று பிரித்துப் பார்த்து ஞானியை எவ்வாறு அறிந்து அடைவது? அழுக்கு, துயரம் முதலான குறைகளை உடைய இந்த உடலைக் காத்து துன்பத்தை அடைகின்ற அறிவில்லாத யான் தெளிவு பெறும் வண்ணம் அருள்வீர். (7)

***

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

கேட்டிநன் மகனே சுரபிவல் லியத்தின்
கிளர்அ!தள் அணிந்துதன் அருகில்
ஓட்டிடற்(கு) யாரும் அணுகிடா விதமாய்
ஓங்குபைங் கூழைமேய் வதுபோல்
நாட்டினில் தவவே டங்களைக் காட்டி
நான்என(து) எனல்அறா தவராய்க்
கோட்டிஅங் கங்கும் கூட்டிவாய் போக்கும்
குணத்த(ர்)அஞ் ஞானியர் ஆவார். *(8)*

(ஆசாரியர் அருளல்) நன்மகனே! கேட்பாயாக. பசுவானது தன்னைத் துரத்தி விடுவதற்கு அருகில் எவரும் வராமல் இருக்கப் புலித்தோல் போர்த்திக்கொண்டு பயிரை மேய்வதைப்போல் உலகில் தவசிகளைப் போல வேடங்கள் பூண்டு, நான்-எனது என்பதை விடாதவராய், அங்கங்கே சாதாரண மக்களைக் கூட்டி வாய்க்கு வந்தவாறு பேசும் குணம் உடையவரே அஞ்ஞானி ஆவார். (8)

***

காதலால் தமையே அகிலரும் புகழ்ந்து
கலைவலோர் எனப்பல பலவாம்
பூதலக் கதைகள் இடையறா(து) ஓதிப்
பொருவிலாப் பரிசுகள் எய்தி
ஓதரும் புதையல் பூதமாய் அதைக்காத்(து)
உதரபோ ஷணமு(ம்)இல் லாமல்
சாதலே புலமை யாகநாள் கழிக்கும்
சழக்க(ர்)அஞ் ஞானியர் ஆவார். (9)

சகல கலைகளிலும் வல்லவன் என்று தம்மையே எல்லோரும் பிரியமுடன் மகிழ்ந்து புகழ்பாட, விதம் விதமான உலக கதைகளை இடையறாது கூறிப் பரிசுகளைப் பெற்று பூதம் காக்கும் புதையலைப் போல அவைகளைக் காப்பாற்றிக் கொண்டு, வயிற்றுக்கும் போதுமான உணவைத் தராமல் இறப்பதே ஞானம் என்று நாட்களை வீணாகக் கழிக்கும் நெறிமுறைகளுக்கு முரண்படும் அவரே அஞ்ஞானியர் ஆவார். (9)

***

ஆனனம் கமல மலர்எனக் காட்டி
அரியவாக்(கு) அமு(து)எனக் காட்டி
மானதம் கொடி கத்திரி மான
மானவர் எவரையும் மயக்கி
வானநாட்(டு) அரசும் கணத்தினில் தருவோம்
வரு(க)எனத் தம்பனம் ஆதி
ஈனமாம் அட்ட கருமவெங் கடலில்
இழுப்ப(ர்)அஞ் ஞானியர் ஆவார். (10)

மலர்ந்த தாமரையைப் போல் முகத்தை அழகாக இருக்குமாறு வைத்துக்கொண்டு, வாய்ச்சொல் அமிழ்தினைப் போல் இனிமையாகப் பேசி, மனம் கொடிய கத்திரிக்கோல்

போல் இருக்க, தம்மிடம் வந்தவரை மயக்கி, "கணப் பொழுதில் சொர்க்கத்தையும் கொண்டு வந்து தருவோம் வாரீர்" என அழைத்து, நீர்மேல் நடத்தல் போன்றவற்றைச் செய்து காட்டி, கருமம் என்கிற கொடிய கடலில் தள்ளிவிடுபவர்கள் அஞ்ஞானியர் ஆவார். (10)

***

வஞ்சகம் பே(ர்)ஊண் நித்திரை அகந்தை
வாய்மைகே(டு) அவாஅழுக் காறு
கொஞ்ச(ம்)அன்(று) ஆகா இவையெலாம் உடையோர்
கொடியஅஞ் ஞானியர் ஆவார்
நஞ்(சு)என இவரைத் தெரிந்துநீங் காயேல்
நதியி(ல்)நீந் தியகுடா வடிதான்
எஞ்ச(ல்)இல் அவாக்கொள் இடையனைப் புணையாய்
எய்திமாய்ந் திட்ட(து)ஒத் திடுமே. *(11)*

வஞ்சகம், பெருந்தீனி, தூக்கம், அகந்தை, பொய்மை, ஆசை, பொறாமை முதலான தீய குணங்கள் கொஞ்சம் அல்ல எனும்படி இவைகள் எல்லாம் உடையவரே கொடிய அஞ்ஞானியர். இவர்கள் விஷம் போன்றவர்கள் எனத்தெரிந்து அவர்களை விட்டு விலகா விடில், ஆற்று வெள்ளத்தில் அடித்துக்கொண்டு சென்ற கரடியை ஆடு என்று எண்ணி அதைக் காப்பாற்றக் கருதி ஆற்றில் குதித்த குறைவில்லா ஆசைகொண்ட இடையனும், அவனைத் தோணியாக எண்ணி பிடித்துக் கொண்ட கரடியும் உயிர்பிழைக்காமல் மாண்டதைப் போல் ஆகும். (11)

***

இன்னவர் இணக்கம் கனவினும் நினையா(து)
இரும்புவிக்(கு) இனியராய் இலகும்
நன்னய அடியார் இணக்கமே தனமா
நாடிய அரைக்கணச் சுகத்தோ(டு)

இன்ன(ல்)தீர் துறக்கச் சுகநிகர் ஆகா(து)
எனப்பல நூல்களும் இயம்பும்
என்னென மொழிவேன் அடியர்தம் இணக்கம்
இறுதியில் தெரிதிமா ணவனே. *(12)*

இத்தகைய தீயவர்களுடன் நட்பு கொள்வதைக் கனவிலும் நினைக்காமல், இந்த உலகிற்கு இனியவராக உதவிகரமாக விளங்கும் நன்னடத்தையுள்ள அடியார்களுடன் சேர்ந்திருத்தல் ஒன்றே சிறந்த செல்வம் என்று நாடுவோர் அடையும் அரை கணநேர சுகத்திற்கு, துன்பம் இல்லாத சொர்க்கத்தின் சுகமும் ஈடாகாது என்று பல சாத்திரங்களும் சொல்வதை என்னென்று யான் எடுத்துக் கூறுவேன்? அடியவர் தம்மோடு சேர்ந்து ஒழுகுவதன் பெருமையைக் கடைசியில் நீ தெரிந்து கொள்வாய். (12)

***

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

அற்ற(ம்)அறு ஞானியர்கள் இத்தகையோர் என்பதையும்
அறைவோம் மைந்தா
நற்றவரைப் பெற்றவரைக் கடவு(ள்)நிக ராக்கருதி
நனிபொ ஷிப்பார்
உற்றஅய லாரையும்தம் போல்பரிந்து நன்னெறியின்
ஒழுகச் செய்வார்
குற்றமெலாம் குணமாக்கொள் வார்எவரும் மனம்புழுங்கக்
கொடும்சொல் லாடார். *(13)*

மைந்தனே! அழிவும் துன்பமும் இல்லாத ஞானியர்கள் இத்தன்மை உடையோர் என்பதை இனிக் கூறுவோம். அவர்கள் நல்ல குணம் உடையோர்களையும், ஈன்ற பெற்றோர்களையும் கடவுள் போல் கருதி

ஆதரிப்பார்கள். அன்னியர்களாக இருந்தாலும் தம்மை அடைந்துவிட்டால் தம்மைப் போலவே அவர்களிடம் அன்பு காட்டி நல்ல நெறியில் ஒழுகச் செய்வார். குற்றத்தையும் குற்றமாகக் கொள்ளாமல் அதனையும் குணமாகக் கொள்வார்கள். ஒருவரும் மனம் புண்படும்படி கடுமையாகப் பேசமாட்டார்கள். (13)

***

வீ(டு)அடையும் நன்னெறியே தம்நெறியாக் கடைப்பிடிப்பார்
வீணாள் போக்கார்
தூடணையும் பூடணையும் சமமாக்கொள் வார்அயலார்
துயரால் மாழ்கின்
நாடரும்தெய் வம்தொழு(து)உள் உருகிநல மேவு(க)என
நவிற்றா நிற்பார்
வேடமும்வீண் வித்தைகளும் வீடினராய் ஆரியன்தாள்
விரும்பா நிற்பார். *(14)*

முத்தியைத் தரும் நெறிமுறைகளையே தம்முடைய வழிமுறைகளாய்ப் பின்பற்றுவர். வீணாக நாளைக் கழிக்க மாட்டார். ஏசுவதையும் போற்றுவதையும் ஒன்றே போல் சமமாகக் கருதுவார். மற்றவர்கள் துயரத்தால் வருத்தம் அடைந்தால் தெய்வத்தைத் தொழுது உள்ளம் உருகி நலமாக வேண்டும் என்று கூறுவார். ஏமாற்றுதற்கு உரிய வேடத்தையும் வீண் வித்தைகளையும் ஒதுக்கியவராய் சற்குருவின் பாதசேவை செய்யவே விரும்புவார். (14)

***

எதி(ர்)உறு(ம்)அன் னியமடவர் ஈன்(று)எடுத்த அன்னைஎன
எண்ணா நிற்பர்
முதியவரைக் கண்(டு)எழுந்து முகம(ன்)உரைத்(து) இருகரமும்
முகிழ்த்து நிற்பார்

துதிசெயினும் உளம்களியார் இத(ம்)அறநிந் தனைசெயினும்
துயரம் கொள்ளார்
பதிபசுபா சங்க(ள்)நிலை இனைய(து)எனத்தேர்ந்(து)அனைத்தும்
பரமாக் காண்பார். *(15)*

எதிர்வரும் பிற மாதர்களைப் பெற்றெடுத்த தாயாக நினைப்பார்கள். வயதில் மூத்தவர்களைக் கண்டதும் எழுந்து இருகரம் கூப்பி வணங்கி நிற்பார்கள். தம்மைப் புகழ்ந்து பேசினாலும் மனம் மகிழமாட்டார்கள். இனிமையின்றி வசை பாடினாலும் துயரப்பட மாட்டார்கள். இறை-உயிர்-உலகம் ஆகிய இவைகளின் நிலை இன்னது என்று தெளிந்து எல்லா வற்றையும் பரமாத்ம வடிவமாகக் காண்பார்கள். (15)

***

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

நீரிடைக் கமலம் போலும்
நிறைந்தசேற் றிடையில் நாளும்
சேருநீள் புழுவைப் போலும்
திந்த்ரிணிக் கனியைப் போலும்
ஒரு(ம்)ஆ தரத்தைக் காட்டி
உறைதரும் தாசி போலும்
பாரினில் கிஞ்சித் தேனும்
பற்றிலா(து) அமர்ந்து வாழ்வார். *(16)*

தண்ணீரில் தாமரை போலவும், நாள்தோறும் சேற்றில் உழலும் பிள்ளைப் பூச்சியைப் போலவும், புளியம் பழம் போலவும், நிஜமான அன்பு காட்டுவது போல் நடித்து வாழ்க்கை நடத்தும் விலைமகள் போலவும், உலகில் இருந்தும் கொஞ்சமேனும் பற்று இல்லாமல் வாழ்வார். (16)

***

புண்ணியம் தரிச னத்தால்
பொருவிலாப் பரிச னத்தால்
எண்ணரும் கலுட சாலம்
இரிந்திடும் பாஷ ணத்தால்
நண்ணரும் நதிகள் தோய்ந்த
நலமுறு நமஸ்கா ரத்தால்
அண்ணநிர் வாண ஏது
வாகும்நல் லவரைச் சாராய். (17)

ஞானிகளின் தரிசனத்தால் புண்ணியம் கிட்டும். ஒப்பற்ற பரிச (தொடுதல்) தீட்சையால் பாவக்கூட்டங்கள் நசித்துப் போகும். உபசேத்தால் (கூறும் சொற்களினால்) புண்ணிய நதிகளில் மூழ்கிய பலன் உண்டாகும். அவர்களை வணங்குவதால் முத்தி அடைய வழிஉண்டாகும். ஆதலால் சாதுக்களைச் சேர்ந்து ஒழுகுவாயாக. (17)

***

மேதையர் அந்நல் லோரை
மேவிடில் செல்வம் பெண்டீர்
காதலர் மீதில் ஆசை
கழிந்திடும் எனக்கேட்(டு) உள்ளேன்
நாதனே எனைப்போல் வார்க்(கு)இந்
நவையுறும் ஆசை நீங்கும்
ஏதுஎங் ஙனம்உண் டாமோ
என(து)இடர் அகலச் சொல்வீர். (18)

(சீடன் கேட்டல்) அறிவில் சிறந்த அந்த நல்லவர் களைச் சேர்ந்து ஒழுகினால் செல்வம், பெண், புதல்வர் மீதான ஆசை நீங்கிவிடும் எனக்கேட்டுள்ளேன். தலைவனே! என்னைப் போன்ற அறிவில்லார்க்கும் துன்பத்தைத் தரும் ஆசை நீங்கும் வழி எவ்வாறு உண்டாகும்? எனது துயர் அகன்றிடச் சொல்வீராக. (18)

***

பொருள்தனை ஈட்டல் துன்பம்
போற்றுதல் துன்பம் தன்பால்
மருவுவோர்க்(கு) அளித்தல் துன்பம்
மற்(று)அதை அழித்தல் துன்பம்
பெருகு(ம்)இத் துன்பம் ஈனும்
பெற்றிய(து) எனச்செல் வத்தைத்
தெருளுறும் அடியார் என்றும்
திரணமாத் திரம்பா விப்பார். *(19)*

(ஆசாரியர் அருளல்) செல்வத்தைச் சேர்ப்பதில் துன்பம், அதைப் காப்பாற்றுவதில் துன்பம், தன்னைச் சார்ந்திருப்பவர்க்கு அளிப்பதில் துன்பம், அதைச் செலவழித்தலில் துன்பம், தொடர்ந்து துன்பம் தரக்கூடிய தன்மை கொண்டது இந்த செல்வம் என்று அறிவுத் தெளிவுடையவர் செல்வத்தைத் துரும்பு போல் கருதுவார்கள். (19)

***

(எண்சீர் ஆசிரிய விருத்தம்)

பூதலத்தில் பொருந்துவன போமின் என்றால்
போகாஎய் தாதனஎன் புரிந்தும் எய்தா
ஆதலின்எப் பொருளினையும் விரும்பா நிற்கின்
அகலாத பெருந்துயருக்(கு) ஆளாச் செய்யும்
ஓது(ம்)அந்தத் துயரினுக்(கு)ஆ ளாவார்க்(கு) எல்லாம்
ஒப்பறுமெய்ஞ் ஞான(ம்)உளத்(து) உதியா(து) அப்பா
தீ(து)அறுமே தாவியர்போல் நசைநீத்(து) உன்னைத்
தெரிவிக்கும் குருபரனைத் தேர்ந்(து)உய் வாயே.(20)

மகனே! உலகத்தில் ஒருவருக்கு வந்து சேரும் பொருள்களைப் 'போ' என்றால் போகாது. கிடைக்காத

பொருளுக்காக என்ன செய்தாலும் கிடைக்காது. ஆதலால் எந்தப் பொருளினை விரும்பி னாலும் அது நீங்கா பெரும்துயரத்தில் ஆழ்த்திவிடும். அத்தகைய துன்பத்தை அடைந்தவர்கள் உள்ளத்தில் நிகரில்லாத மெய்ஞானம் உண்டாகாது. தீதிலாத அறிவுடை யோரைப் போல் ஆசையை விட்டு, "நீ யார்" என்று உனக்குத் தெரிவிக்கும் ஆசாரியரைத் தேடி அடைந்து உய்வாயாக. (20)

***

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

நலமிகு ஞா(ன)ஆ காய
நாட்ட(ம்)எய் தியமே லோர்தம்
மலர்அடித் தொண்டால் செல்வம்
மதித்திடு நசைநீத் தாலும்
தலமிசை அன்பின் மிக்க
தையல்மீ(து) ஆசை எவ்வா(று)
அலகிலாக் குணத்தோய் நீத்தற்(கு)
ஆகு(ம்)ஈ(து) அருளல் வேண்டும். (21)

(சீடன் கேட்டல்) அளவற்ற நற்குணங்களை உடைய ஆசாரியரே! நன்மைகள் நிறைந்த ஆத்மஞானம் அடைந்த பெரியோர்களின் மலர்ப்பாத தொண்டினால் யாவரும் மதிக்கின்ற செல்வத்தின் மீதான ஆசை நீங்கினாலும், பூமியில் அன்புடைய மாதர் மீதான ஆசையை நீக்கும் வழியை அருளிச்செய்ய வேண்டும். (21)

***

பேசரு மாயை தானே
பேதையர் உருவம் கொண்டு
மாசுறும் புருடர்க்(கு) எல்லாம்
மதிமயக் கம்செய் விக்கும்

நீசமாம் என்பும் தோலும்
நிணமும்ஆ தியவாக் கண்டே
ஈச(ன்)நல் அடியார் பாதம்
எய்தினோர்க்(கு) இதுபோம் மாணா. *(22)*

(ஆசாரியர் அருளல்) மாணாக்கனே! சொல்லி விளக்குதற்கு இயலாத மாயையானது தானே மாதர் உருவாக வந்து மனதில் அழுக்குடைய ஆண்களின் புத்தியை மயக்குகின்றது. இந்த உடலானது இழிவான எலும்பு தோல் கொழுப்பு இவைகளுடன் கூடியது என்பதைப் புரிந்துகொண்டு இறை அடியார் தம் பாதத்தைச் சேர்ந்தவர்க்கு இந்த பெண்ணாசை நீங்கும். (22)

***

நித்தமும் அலந்தை செய்யும்
நிசிமனப் பேயை வென்ற
உத்தமர் இணக்கம் தன்னால்
உறுதனம் தாரத்(து) ஆசை
இத்தரை மீதில் போக்கி
இருப்பினும் இகத்தற்(கு) ஒண்ணாப்
புத்திரர் மீதில் ஆசை
போக்கல்எங் ஙனமோ சொல்வீர். *(23)*

(சீடன் கேட்டல்) தினமும் துயரத்தைத் தரும் மன இருளாகிய பேயை வென்ற உத்தமர்களின் சேர்க்கையால் இப்பூமியில் அடைகின்ற செல்வம், மனைவி மீது கொள்ளும் ஆசையைப் போக்கி விட்டாலும், இழப்பதற்கு அரிதான புத்திர பாசத்தை எவ்வாறு போக்குவது என்பதை அருளிச் செய்வீர். (23)

***

(கலிவிருத்தம்)

துரி(சு)இ லாதசு குணமிகக் கொளீஇக்
கரி(சு)அ றாமதர்க் கண்ணியர் ஆவலைத்
திரண மாய்எணித் தீர்க்கின் மக(வு)அவா
பரிதி முன்னர்ப் பனியெனப் பாறுமே. *(24)*

குற்றம் இல்லாத நற்குணங்களைக் கொண்டு, வசப்படுத்திக் களிக்கின்ற கண்களை உடைய மாதர் மீதான ஆசையைத் துரும்பு போல் கருதி நீக்கிடில், புத்திர ஆசை சூரியன் முன் பனி நிற்காதது போல ஓடிவிடும். (24)

***

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

அரியஞா னம்கொண் டாலும்
அவனியில் பெற்றெ டுத்த
உரியனாம் பிதாக்க டன்தான்
ஒழியு(ம்)ஆ(று) எங்ஙன் என்னில்
துரியஅ தீத மாகத்
துலங்கிடும் தனைத்தான் நோக்கில்
பிரியமாய் பெற்றெ டுத்த
பிதாக்கடன் ஒழியும் அன்றே. *(25)*

(எல்லோராலும்) அடைதற்கு அரிதாகிய ஞானம் வரப்பெற்றாலும், உலகில் ஈன்ற தந்தைக்கு உரிய கடன் எவ்வகையில் ஒழியும் என்று கேட்கின், மூன்று அவத்தைகளுக்கும் மேலான துரியமாக விளங்கும் தன்னை விசாரம் மூலம் தான் யார் என்று அறிந்து காணும்போது பிதா புத்திரர் அனைவரும் பிரம்மமே ஆவர். அந்த பிரம்மத்தைக் காட்டிலும் வேறாக இல்லை என்று தெளிந்து விட்டால் புத்திரன் தந்தைக்கு ஆற்ற வேண்டிய கடன் என்று எதுவும் இல்லை என்பது விளங்கும். (25)

***

அகமுகத்(து) அறிவாய் மன்னும்
ஐயனே ஒருசந் தேகம்
புகலுதற்(கு) உள(து)ஏ(து) என்னில்
புத்திரப் பே(று)இல் லார்க்குத்
திகழுநற் கதிஇன்(று) என்று
செப்புநூல் கருத்(து)ஏ தோஎன்
அகமகிழ்(வு) எய்தும் வண்ணம்
அன்புடன் அருள்செய் வீரே. *(26)*

உள்முக நாட்டத்தால் அறிவாகி விளங்கும் குரு மூர்த்தியே! கேட்பதற்கு ஒரு சந்தேகம் இருக்கிறது. அது என்னவெனில் புத்திர பாக்கியம் இல்லாதவர்க்குச் சுவர்க்கம் இல்லை எனக் கூறுகின்ற சாத்திரங்களின் உட்கருத்து யாது என்பதை அடியேன் மகிழுமாறு அன்புடன் அருள்வீர். (26)

***

சகதலத்தில் புத்திரப்பே(று) இல்லார்க்(கு) எல்லாம்
சற்கதிஇன்(று) என்(று)உடலம் சதம்என் பார்க்கே
தகுதிஉடைத் தாம்அலஎன் றால்சு(க) ஆதி
தபோதனர்க்குப் புத்திரர்ஆர் தமைத்தாம் கண்ட
புகழ்மிகு(ம்)அன் னோர்க்(கு)அரிய கதிதான் இன்றோ
புத்திரர்ஓர் நூற்றுவரைப் பெற்றோன் ஆகித்
திகழ்திருத ராட்டிரன்எப் பயனைக் கண்டான்
தெள்ளறிவே புத்திரனாக் கொள்ளல் பாற்றே. *(27)*

உலகத்தில் புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்குச் சுவர்க்கம் இல்லை என்பது தேகத்தில் அபிமானமும், தேகம் சத்தியமானது என்றும் நினைக்கின்ற மக்களுக்கே உரிய கருத்தாகும். அவ்வாறு இல்லை எனில், சுகர் முதலிய தவம் உடையவர்களுக்குப் புத்திரர் யார்? புத்திரர் இல்லை என்பதால் தன்னைத் தான் அறிந்த பெருமை வாய்ந்த

அவர்களுக்கு நற்கதி இல்லாமல் போனதோ? நூறு பிள்ளைகளைப் பெற்ற திருதராட்டிரன் என்ன பயனைக் கண்டான்? அதனால் தெளிந்த ஞானமே புத்திரபாக்கியம் என்று எடுத்துக் கொள்வதே சிறந்ததாகும். (27)

***

(எழுசீர் ஆசிரியவிருத்தம்)

மெய்இதேல் தந்தை மைந்த(ன்)ஆ கின்றான்
வீறுதாய் பாரிஆ கின்றாள்
மையலார் மகனே தந்தைஆ கின்றான்
மனையவள் அன்னைஆ கின்றாள்
வெய்யபல் பிறவி தோறும்இவ் வகையாய்
வேறுவே(று) ஆவ(ர்)என்(று) உரைக்கும்
துய்யசாத் திரத்தின் கதியெதோ இதன்மேல்
சுதர்தரும் கதியெதோ துணிவாய். *(28)*

உண்மை இதுவென்றால், அவரவர் வினைக்கு எற்றவாறு, (இந்தப் பிறவியில்) தந்தையாக இருப்பவன் (அடுத்த பிறவியில்) அவனுக்கு மகன் ஆகின்றான். (இந்தப் பிறவியில்) சிறந்த தாயானவள் (அடுத்த பிறவியில்) அவனுக்கு மனைவி ஆகின்றாள். (இந்தப் பிறவியில்) பாசமிகு மகனாக இருப்பவன் (அடுத்த பிறவியில்) அவனுக்குத் தந்தை ஆகின்றான். (இந்தப் பிறவியில்) மனைவியாக இருப்பவள் (அடுத்த பிறவியில்) அவனுக்குத் தாய் ஆகின்றாள். இவ்வாறு கொடிய பல பிறவிகள்தோறும் வேறு வேறு உறவுமுறை ஆகின்றனர் என்று கூறுகின்ற சாத்திரங்களின் கருத்து என்னவாகும்? இதன்பிறகு புத்திரர் இருப்பின் அவர் கதிஎன்ன? ஆராய்ந்து துணிவாய். (28)

***

(எண்சீர் ஆசிரிய விருத்தம்)

மாகலைகட்(கு) எட்டாத மருமம் ஆகி
மரு(வு)அணுவுக்(கு) அணுவாகி மகத்தும் ஆகி
ஏகமயம் ஆகிமுதல் இடைஈ(று) இல்லா(து)
இலகுசிதா னந்த(ம்)எனும் சலதி ஆழ்ந்த
வா(கு)அடியார் அடிஅணுகில் செல்வம் பெண்டு
மகவி(ன்)அவா மாய்ந்திடினும் மாற்றற்(கு) ஏலாம்
தேகமிசைத் தாகு(ம்)அவாத் தியாகம் செய்யும்
திறம்திரமாய் அடியேற்குத் தெரிவிப் பீரே. (29)

(சீடன் கேட்டல்) மிகச் சிறந்த உயரிய கலைகளுக்கும் எட்டாத மர்மமாகவும், அணுவுக்கும் அணுவாக மிகச் சிறியதாகவும், பெரியவைகளுக்கும் பெரிய தாகவும், ஒன்றே ஆகவும், முதல்-நடு-முடிவு என்பது இல்லாததாகவும் விளங்குகின்ற அறிவாகிய ஆனந்தக் கடலில் மூழ்கித் திளைக்கும் அடியார் திருவடிகளைப் பற்றிக் கொள்வதனால் செல்வம், மனைவி, மக்கள் மீதான ஆசை நீங்கினாலும், விட்டு விடுதற்குக் கடினமான உடல் பற்றினைத் துறக்கத் திடமான வழியினை அடியேனுக்கு உரைப்பீர். (29)

***

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

போகத்தில் இச்சை அற்ற
புண்ணிய மாணா கேட்டி
மோகத்திற்(கு) இடம்ஆ காத
முறைமையால் குருவைச் சார்ந்து
தேகத்தில் பொலியா நிற்கும்
தேகியைத் தெரிசிக் கும்கால்
ஆகத்தின் மேற்கொண்(டு) உள்ள
அவாஎலாம் அகலும் தானே. (30)

இன்பம் அனுபவிப்பதில் விருப்பம் இல்லாத புண்ணியம் நிறைந்த மாணாக்கனே! கேட்பாயாக. மோகத்திற்கு இடம் கொடுக்காத முறையில் ஆசாரியரை அணுகி, தேகத்திற்குள் இருக்கின்ற தேகியை (ஆன்மாவை)க் கண்டு உணர்கின்ற பொழுது, உடலின் மீதான ஆசை அனைத்தும் தானாகவே அகன்று விடும்*(30)*

***

ஒன்பது வாயில் ஏய்ந்த
ஊத்தைசேர் தோல்து ருத்தி
என்புவெண் நரம்பு செந்நீர்
இறைச்சிமூத் திரம்பு ரீடம்
புன்புழுக் கணம்மொய்த்(து) உள்ள
பொய்உடல் மையல் தன்னைத்
துன்(பு)எனத் தொலைத்து நின்றார்
துரி(சு)இலாத் தூயர் தாமே. *(31)*

ஒன்பது ஓட்டைகளை உடைய அழுக்கு சேர்ந்திருக்கும் தோல் பையில் எலும்பு. நரம்பு, இரத்தம். மாமிச சதை, சிறுநீர், மலம், புழுக்கள் நிறைந்துள்ள இந்த பொய்யான உடலின் மீது ஆசை கொள்வது துன்பத்தைத் தரவல்லது என்று அந்த ஆசையை விட்டவர்கள் குற்றம் இல்லாத தூய்மையானவர்கள். (31)

***

திருந்தவே சொன்ன வண்ணம்
தீர்(வு)இலா தாகித் தீங்கே
தரும்த(ன)ஆ திகளின் ஆசை
தகவுடன் நிவர்த்தி செய்தோர்
பொருந்து(ம்)இல் உறைதல் நன்றோ
பொற்(பு)உறும் அரணி யத்தில்
இருந்திடல் நன்றோ என்றன்
இதயம்ஒத் திடச்சொல் வீரே. *(32)*

(சீடன் கேட்டல்) மனம் திருந்தி சீர்பெற்று உய்யத் தேவரீர் அருளியவாறு முடிவிலாத துயரத்தைத் தருகின்ற செல்வம் முதலியவற்றின் மீதான ஆசையைத் மனத் தெளிவாகிய வலிமையினால் துறந்தவர், உலகில் வீட்டில் வசிப்பது நல்லதா அல்லது அழகிய காட்டில் இருப்பது நல்லதா என்பதை அடியேன் இதயம் ஏற்றுக் கொள்ளும்படி சொல்வீராக. (32)

***

சகலமும் மித்தை என்னும்
சத்திய புத்தி யோடே
அகமுகம் உறுமே லோர்கள்
ஆக்கிய வினைக்(கு)ஈ டாக
இக(ல்)அற இல்லம் தன்னில்
இருக்கினும் தருக்கள் மேய
புக(ழ்)உறு கான கத்தில்
புக்கினும் ஒன்றே மாணா. *(33)*

(ஆசாரியர் அருளல்) மாணாக்கனே! அனைத்தும் மித்தை (பொய்) என்கின்ற உண்மையான அறிவுடன் உள்நாட்டம் கொண்ட மேலோர்கள் ஆற்றிய தத்தம் வினை களுக்கு ஏற்ப மனப் போராட்டம் இல்லாமல் வீட்டில் வசிப் பதும், மரங்கள் நிறைந்த பெருமைமிகு காட்டில் இருப்பதும் அவர்களுக்கு ஒன்றே. (33)

***

(எண்சீர் ஆசிரிய விருத்தம்)

ஓதுகின்ற பற்பலநன் னெறிகட்(கு) உள்ளே
ஒருமருமம் நவிலுகின்றேன் உசித மாகப்
பேத(ம்)அறப் பல்உயிரும் தம்போல் பேணிப்
பேரின்பம் தந்(து)அருளும் பேசற்(கு) ஒண்ணாச்

சீதர(ன்)அம் பிகைரமணன் திருத்தாள் போதில்
திடபத்தி மாத்திரம்சம் பவிக்கு மாயில்
கோ(து)அறுநற் குணம்மூன்றாம் பிறைக்(கு)ஒப் பாகக்
குறை(வு)அறஓங் கிக்கதியும் கூடும் தானே. (34)

***

சாத்திரங்கள் சொல்கின்ற பலவிதமான நன்னெறிகளுக்கு உள்ளே பொதிந்திருக்கும் மர்மத்தைக் கூறுகின்றேன். பல உயிர்களையும் பேதம் பார்க்காமல் தம்மைப் போலக் காத்து, அவைகளுக்குத் தகுந்தபடி சுகம் அளிக்கின்ற கூறுவதற்கு இயலாத அருள் நிறைந்த திருமால், சக்தி, சிவன் ஆகியவர்களின் திருவடிகளைப் பற்றிக் கொண்டு திடமான பக்தி தோன்றுமாயின், வளர்கின்ற மூன்றாம் பிறைச் சந்திரனைப் போல் குறைவில்லாத நற் குணங்கள் யாவும் வளரப்பெற்று நற்கதியும் கூடும். (34)

***

மதியால் அதிபரி பக்குவம் மன்னும்சுத னேகேள்
மயலே செயுமது மேவிய மட்பாண்ட(ம்)அ தனைநல்
துதிமே வியசுதை நேர்பல நதிநீர்கொடு நன்றாச்
சுத்தம் செயினும் பற்றிய துர்வாசனை அறுமோ
விதியால் பலகரு மங்களை விரிவா(ய்)இயற் றிடினும்
வீண்பா(டு) அல(து)அத னால்மருள் விலகா(து)ஒளி வீசும்
கதிகாட் டிடுமுதல் வன்மலர்க் கழல்நாடஅ றிகிலார்
கலைதேர் புலவர்கள் ஆயினும் கடைத்தேறுதல் அரிதே.

அறிவினால் மிகுந்த பரிபக்குவம் அடைந்த மகனே கேள். போதை தருகின்ற மது ஊற்றி வைக்கப்பட்டிருந்த மண் பாண்டத்தை யாவரும் போற்றுகின்ற அமிர்தத்திற்கு நிகரான பல நதிகளின் தண்ணீரைக் கொண்டு கழுவி சுத்தம் செய்தாலும் அந்த துர்நாற்றம் போகாது. அதைப் போல விதிப்படி பற்பல நல்ல கருமங்களை (அவசரமாக சுருக்காமல்) முழுவதும் செய்தாலும் அது வீண் செயல்களே

தவிர அதனால் அஞ்ஞானம், அபிமானம் இவற்றால் உண்டாகும் மயக்கம் நீங்காது. நற்கதியைக் காட்டி அருளும் முதல்வனின் ஒளிவீசும் மலர்ப்பாதம் நாடுதற்கு அறியாதவர், பல கலைகளிலும் தேர்ச்சி பெற்ற புலவர்களாக இருந்தாலும் கடைத்தேறுவது மிக மிகக் கடினமாகும். (35)

***

எட்(டு)எழுத்தில் இரண்டாவ(து) எழுத்தும் தூய்தாய்
இலங்கிடு(ம்)ஐந்(து) எழுத்தி(ல்)இரண் டா(ம்)எ ழுத்தும்
சிட்டர்புகழ்ந் திடுராம எனுநன் நாமம்
சிறப்புஆ கிய(து)எனவே செப்பா நிற்கும்
மட்டறுநன் னூல்களி(ன்)உள் கருத்(து)ஆ ராய்ந்து
மன்னு(ம்)இரா மப்பிரம மலர்த்தாள் போற்றி
நிட்டைபுரி வோர்க்(கு)அரிய சித்தி முத்தி
நிசமாகக் கைகூடும் நினைவில் கொள்வாய். (36)

'நாராயணாய' என்ற எட்டெழுத்து மந்திரத்தின் இரண்டாவது எழுத்து 'ரா', தூய்மையாகத் திகழ்கின்ற ஐந்தெழுத்தான 'நமசிவாய' என்ற மந்திரத்தின் இரண்டாவது எழுத்து 'ம' இரண்டும் சேர்ந்து "ராம" என்ற சிறப்புறும் நாமம் ஆனது என்று சொல்லும் அளவில்லாத நல்ல நூல்களின் உட்கருத்தினை ஆராய்ந்து, நிலையான "ராம" பிரம்மத்தின் மலர்ப்பதங்களை வணங்கி தியானம் செய்வோர்க்கு கிடைத்தற்கு அரிய சித்திகள் முத்தி ஆகியவை சத்தியமாகக் கைகூடும் என்று கூறியிருப்பதை மனதில் கொள்வாய். (36)

(மற்ற மந்திரங்களை உச்சரிக்க குளித்து விட்டு பூசை அறையில் அமர்ந்து சொல்வது முதலான விதிகள் உள்ளனவாம். 'ராம' நாமத்திற்கு அத்தைகய விதிகள் ஏதுமில்லை, எப்போது வேண்டு மானாலும் உச்சரிக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது.)

***

வாரணத்தின் மீ(து)ஏறிச் செல்லா நிற்கும்
வல்லவன்தான் பல்இளித்துக் குரைத்துச் சூழும்
சாரமே யங்களுக்(கு)எள் துணையும் அஞ்ஞாத்
தன்மையது போல்புவனம் தழைக்க வந்த
பூரணத யாநிதியா கியஇ ராமன்
பொற்(பு)உறுநா மம்தனைஎப் பொழுதும் சிந்தித்(து)
ஆரணமார்க் கம்தவறா(து) உபாசிப் போர்கள்
அல்லல்தரும் தீவினைகட்(கு) அஞ்சார் அன்றே. (37)

யானையின் மீது ஏறிச் செல்லும் வல்லமை உள்ள ஒருவன் பற்கள் தெரிய குரைத்துக் கொண்டு வந்து சூழ்ந்து கொள்கின்ற நாய்களுக்கு சிறிதளவும் அஞ்சமாட்டான். அதைப் போல உலகம் தழைக்க அவதரித்த நிறைவான கருணைச் செல்வமான இராமபிரானின் அழகுடைய நாமத்தை எப்பொழுதும் சிந்தித்து வேதம் கூறும் வழிமுறைகள் தவறாது வழிபடுவோர்கள் துயரம் தருகின்ற தீயவினைகள் வரினும் சிறிதும் அஞ்சமாட்டார்கள். (37)

குவலயத்தில் கிரகண(ம்)ஆ தியநன் னாளில்
கோதா(ன)ஆ திகள்இயற்றல் குளங்கள் வெட்டல்
கவின்உறு(ம்)ஆ லயம்கட்டல் காசி கங்கை
கயைபிரயா கைக்க(ண்)நிதம் காத்தி ருத்தல்
தவநிலையில் கல்நிகரா நெடுநாள் நிற்றல்
தண்புனலின் நீர்ப்பறவை தனைப்போல் முழ்கல்
இவைஅனைத்தும் புரிவோர்தம் பல(ன்)இ ராமன்
எழில்அடியார் அடைபலனுக்(கு) இணைஆ காதே (38)

உலகில் சூரிய-சந்திர கிரகணம் முதலான நல்ல நாட்களில் பசு முதலியவை தானம் அளித்தல், குளங்கள் வெட்டுதல், அழகிய ஆலயங்களைக் கட்டுதல், காசி கங்கை கயை பிரயாகை நதிகளில் தினமும் முழ்கி அங்கே

தங்கியிருத்தல், தவநிலையில் நீண்ட நாட்கள் கல்லினைப் போன்று நின்று கொண்டிருப்பது, நீர்ப்பறவை போலக் குளிர்ந்த நீரில் முழ்குதல் இவை அனைத்தையும் செய்வோர்க்கு கிடைக்கும் பயனானது இராமபிரானின் அடியார்கள் அடைகின்ற பயனுக்கு இணையாகாது. (38)

***

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

கா(டு)அடைந் திடுவோர் உள்ளம்
கலங்கிடப் பொருள்ப றித்து
வீடலின் மனைவி மக்கள்
வியக்கவாழ்ந் திடும்ஓர் மூட
வேடனைத் தவத்தின் மிக்க
விள்ளரு முனியாச் செய்து
நாடரு முத்தி நல்கும்
நாம(ம்)இவ் இராம நாமம். *(39)*

காட்டின் வழியாகக் கடந்து செல்பவர்களின் உள்ளம் கலங்கிப் பதறிட அவர்கள் கொண்டு செல்லும் பொருளைப் பறித்து, தம்முடைய மனைவி மக்கள் சுகவாழ்வென அதிசயம் கொள்ளும் வண்ணம் வாழ்ந்து வந்த மூடனாகிய வேடன் (பிற்காலத்தில் முதல் நூலாகிய இராமாயணம் எழுதிய வான்மீகி என்ற) ஒருவனைத் தவத்தில் சொல்லுதற்கு அரிய முனிவராகச் செய்து யாரும் எளிதில் அடைவதற்கு அரிதான முத்தியை அளித்தது 'ராம' நாமம் ஆகும். (39)

***

பாந்தளைக் கரத்தில் பற்றி
பந்துபோல் ஆட்ட லாகும்
வேந்தணல் விழுங்கல் ஆகும்
வியாக்கிர கோரப் பற்கள்

சாந்தமாப் பிடுங்கல் ஆகும்
சலிப்பிலா(து) இராம நாமம்
தேர்ந்(து)உளத்(து) இருத்து வோர்க்குத்
தீவினை எனல்இன்(று) அன்றே. *(40)*

பாம்புகளைக் கையில் எடுத்து பந்து போல் விளையாட்டு காட்டலாம். சுடுகின்ற நெருப்பினை விழுங்கலாம். புலியின் கோரப் பற்களைச் சாந்தமாக இருந்தே பிடுங்கலாம். சலிப்பின்றி (அன்போடு மனம் ஒன்றி) 'ராம' நாமத்தை ஆராய்ந்து உள்ளத்தில் சிந்தனை செய்வோர்க்குத் தீவினை நெருங்காது. (40)

***

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

மற்றவர்க்(கு) உரிய மனைவியைப் புணரும்
வஞ்சநெஞ் சரும்பிரி ய(ம்)அதாய்ப்
பெற்றெடுத் தவரைப் பேணுதல் செய்யாப்
பேயரும் பெரியரைப் பழிக்கும்
கற்(று)அறி யாத கயவரும் இன்னும்
கரு(த)அரும் பதித(ர்)ஆ னவரும்
நற்றவர் பணியும் இராமநா மத்தை
நவிலநற் புனித(ர்)ஆ குவரே. *(41)*

பிறருடைய மனைவியைப் புணருகின்ற கள்ள மனத்தவரும், பிரியமாகப் பெற்ற தாய் தந்தையரைக் காப்பாற்றாத பேயரும், பெரியவர்களைப் பழிக்கின்ற கல்லாத கயவரும், நினைப்பதற்கும் அரிதான பாவச் செயல்களைச் செய்யும் ஒழுக்கம் இல்லாதவரும் தவத்தின் மிக்கவர் பணிந்து ஏத்தும் 'ராம' நாமத்தைச் செபிக்கும் பட்சத்தில் புனிதர் ஆவார். (41)

***

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

அன்புடன் இந்நா மத்தின்
அருமைஓ ரா(து)எத் தும்கால்
என்பயன் என்பாய் ஆகில்
ஈன்றதாய் முலைப்பா லைச்சேய்
இன்புற அறியா(து) உண்ணின்
இரும்பசி அடக்கி டாமல்
துன்(பு)இயற் றிடுமோ இந்தத்
தொல்உல கினில்எங் கேனும். *(42)*

பிரியமுடன் 'ராம' நாமத்தின் மகிமையை (மற்றும் உட்பொருளை) ஆராய்ந்து அறியாமல் வெறுமனே உச்சரித்து துதித்தால் என்ன பயன் என்று கேட்டால், பச்சிளம் குழந்தையானது ஈன்ற தாயின் முலைப்பாலை அதன் சத்து தன்மையை அறியாது குடித்தாலும் அக்குழந்தையின் பசி அடங்காமல் (பாலானது) துன்பம் தருவது இந்த உலகில் எங்காவது உணடோ? (42)

***

புண்ணியகன் மங்களினும் எண்வகையோ கங்களினும்
புலமை சான்றோர்
திண்ணியமெய்ஞ் ஞானமதே முக்கியமாம் என்னஉரை
செய்வார் அல்லால்
நண்ணரும்மெய்ஞ் ஞான(ம்)இ(து)அஞ் ஞான(ம்)இ(து)என்(று)
[எனக்(கு)அறிய
நவில்வார் இல்லை
தண்ணருளார் உம(து)அடியைப் போற்று(ம்)அடி
[யேற்(கு)அவற்றைச்
சாற்று வீரே. *(43)*

(சீடன் கேட்டல்) புண்ணிய கர்மங்களைக் காட்டிலும், எட்டு வகை யோகங்களைக் காட்டிலும் சிறந்த திடமான மெய்ஞ்ஞானமே முக்கியமானது என்று சாத்திரங்களில் வல்ல சிறந்த சான்றோர்கள் சொல்கின்றனர். ஆனால் அடைவதற்கு அரிய மெய்ஞ்ஞானம் இது எனவும் அஞ்ஞானம் இது எனவும் யான் அறியுமாறு சொல்பவர் இல்லை. அருள் நிறைந்த உமது திருவடியைப் போற்றும் அடியேனுக்கு அவைகளைக் கூறி அருள்வீர். (43)

***

வால்நிறஓ திமம்உதகம் தனைநீக்கித் தீம்பாலை
மாந்தன் மான
மேல்நிலையை உறவிரும்பு மேதைய(ர்)ஆ ரியன்அருளை
மேவிப் பொய்சேர்
ஈன(ம்)உறும் தேகத்தை வெறுத்(து)இலகும் ஆன்மாவை
இனிது காண்டல்
ஞான(ம்)எனல் ஆகு(ம்)இதே வேதாந்த சம்மதம்நீ
நாடிக் கொள்வாய். *(44)*

(ஆசாரியர் அருளல்) வெண்மை நிற அன்னப் பறவை பாலில் கலந்துள்ள நீரினை நீக்கிச் சுவையான பாலினை அருந்துவது போல், மேலான நிலையை அடைய விரும்பும் அறிவுடையோர் ஆசாரியருடைய அருளைப் பெற்று, பொய்யான இழிந்த தேகத்தை (அபிமானத்தை) வெறுத்து, விளங்குகின்ற ஆன்மாவை அறிதலே ஞானம் என்பதாகும். இது வேத முடிவானன உபநிடதங்கள் கருத்தாகும். நீ இதனை நாடி அடைவாய். (44)

***

இத்திற மான ஞானம்
எய்திய புனிதர் ஆனோர்க்(கு)
எத்திறத் தொழிலின் கண்ணும்
இடுக்க(ண்)உண் டாகா(து) இ:(து)இல்

பெத்தருக்(கு) உலக வாஞ்சைப்
பேய்பிடித்(து) ஆட்டும் ஆற்றல்
சத்திய மாகச் சன்ம
சஞ்சலம் அகலா(து) அன்றே. (45)

இந்த ஞானத்தை அடைந்த புனிதமானவர்கள் எந்தத் தொழிலைச் செய்தாலும் அதில் துன்பம் உண்டாகாது. இந்த ஞானம் இல்லாத பந்தம் உடையவருக்கு உலக ஆசை எனும் பேய் பிடித்து ஆட்டும், பந்தம் அற்றுப் போகாததால் சத்தியமாகப் பிறவித் துன்பம் நீங்காது. (45)

***

எங்கணும் எப்போ தும்சித்(து)
எனவிளங் கிடு(ம்)அ தேநான்
தங்குநீ அளவி லாத
சராசரம் அனைத்தும் ஆகும்
இங்(கு)இதே நிச்சி தார்த்தம்
இதைஅலால் வே(று)ஒன்(று) இல்லை
துங்கவே தாந்த நூலின்
துகள்அறு மருமம் ஈதே. (46)

எல்லா இடங்களிலும் எல்லா காலங்களிலும் அறிவாகப் பிரகாசிக்கின்ற அதுவே நான், நீ, மற்றும் அளவில்லா அசையும் அசையாப் பொருள்கள் என விளங்கும் அனைத்து பிரபஞ்சமும் ஆகும். இங்கு இதுவே நிச்சயமான முடிவாம். இதைத் தவிர்த்து வேறு ஒன்றும் இல்லை. சிறப்பான வேதாந்த உபநிடத சாத்திரங்களின் குற்றமிலாத மர்மம் ஆகிய உட்கருத்து இதுவே. (46)

***

இந்தநன் னெறியை ஓரா(து)
ஏனைய மதங்கட்(கு) உள்ளாய்
சந்ததம் எதுசெய் தாலும்
சாம்பரில் பெய்த நெய்போல்

மைந்தனே அவலம் ஆகும்
மற்(று)இத னாலே முத்தி
வந்திடும் எனல்பி ராந்தி
வழிஎனற்(கு) ஐயம் இன்றே. (47)

இந்த நன்னெறியை ஆராய்ந்து உணராமல் மற்ற மதங்களின் கருத்துகளுக்கு ஆட்பட்டு, எப்போதும் எதனைச் செய்தாலும் சாம்பலில் ஊற்றிய நெய்போல் மகனே! வீணாகப் போகும். மற்றபடி இவைகளால் முத்தி அடைய முடியும் என்பது வீண் பிரமை (மயக்கம்) சார்ந்த வழி என்பதில் சந்தேகம் இல்லை. (47)

திருத்தியாய் உள்வி சாரம்
செய்தலால் எவர்கள் உள்ளில்
பெருத்திடும் சலனம் இன்றிப்
பிறங்குசாந் திஅ(து)உண் டாமோ
கருத்தினுக்(கு) இசைஇன் னோர்க்கே
கனசுகம் இவர்க்(கு)ஒப் பாக
ஒருத்தரை எடுத்துக் கூறல்
உணர்விலார் செய்கை ஆமே. (48)

உள்ளத் திருப்தியுடன் உள்நோக்கிய ஆத்ம விசாரம் செய்வதால் எவர்கள் உள்ளத்தில் அதிகரிக்கின்ற சலனம் ஏதும் இன்றி விளங்கும் சாந்தி உண்டாகுமாயின் விசாரத்தோடு இணைந்த அவர்களுக்கே அதிக சுகம் உண்டாகும். இவர்களுக்கு நிகராக யாரேனும் ஒருவரைச் சுட்டிக் காட்டுவது அறிவில்லாதவர் செயல் ஆகும். (48)

***

அகிலமும் சிற்சொ ரூபம்
ஆம்எனத் தெளிந்து ஞானம்
திகழ்தரக் கொடும்அஞ் ஞானத்
திமிரநீத் தவர்க்கு முத்தி

அகங்கையில் கனிபோல் தோன்றும்
அ:.(து)இலார்க்(கு) இந்தி யங்கள்
மிகவசப் படினும் முத்தி
மித்தைஎன்(று) உணரு வாயே. (49)

சகலப் பிரபஞ்சமும் அறிவு வடிவம் ஆகும் என்று தெளிந்து ஞானத்தில் திகழ்ந்து அஞ்ஞான இருளை அகற்றிய வர்களுக்கு முத்தியானது உள்ளங்கையில் உள்ள கனிபோன்று எளிதாகத் தோன்றும். அது இல்லாத வர்களுக்கு இந்திரியங்கள் வசப்பட்டிருந்த போதிலும் முத்தி (அடைந்துவிட்டதாக அவர்கள் கருதினாலும் அது) பொய்யாகும் என்று அறிவாய். (49)

***

(எண்சீர் ஆசிரிய விருத்தம்)

நீரினிடம் தோய்வானால் முத்திஉண்டாம் என்னில்
நித்தியம்தோய்ந் திடும்மீனம் முத்தியுறல் வேண்டும்
பாரினிடம் தலைகீழாய் இருப்பின்முத்தி என்னில்
பற்பலவௌ வா(ல்)அவிதம் பயன்அடைய வேண்டும்
சீரியமோ னத்தாலே செனன(ம்)அறும் என்னில்
சேட்டைஅறும் கொக்கு(ம்)அந்தச் சிறப்படைய வேண்டும்
நேரிலாப் படிப்பதனால் முத்திஎன்னில் கிளிகள்
நித்தியம்சொன் னதைப்படித்து முத்தியுறல் வேண்டும்.

நீரில் முழ்குவதால் முத்தி உண்டாகும் என்றால் தினமும் நீரிலேயே வசிக்கின்ற மீன்களுக்கு முத்தி உண்டாக வேண்டும். உலகில் தலைகீழாகத் தவத்தில் நிற்பதால் முத்தி உண்டாகும் என்றால் பல வௌவால்கள் அவ்வாறு தொங்குவதால் முத்தி அடையவேண்டும். ஆழ்ந்த மௌன விரதம் இருப்பதால் முத்தி உண்டாகும் என்றால் இரைக்காக அசைவற்று நிற்கின்ற கொக்குகளும் அந்த

முத்தி அடைய வேண்டும். நிகரில்லா சாத்திரங்களைப் படிப்பதனால் முத்தி கிடைக்கும் என்றால் தினமும் சொன்னதைச் சொல்கின்ற கிளிகளும் அந்த சாத்திரத்தைச் சொல்வதால் முத்தி அடைதல் வேண்டும். (50)

***

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

பின்னும் காற்றைப் புசிப்பதனால்
பேரா னந்த முத்திஎன்னில்
பன்னும் அதனைப் புசித்(து)இருக்கும்
பாந்தட்(கு) அந்தப் பயன்தொடர(ற்)கு
என்ன ஐயம் ஆதலினால்
இவ்வா றாய கருமிகட்குத்
துன்னும் கொடிய மாமாயை
தொலையா(து) அலைக்கும் தூயவனே. (51)

தூயவனே! மேலும் பிராண வாயுவான காற்றை மட்டும் நெறிப்படுத்துவதன் மூலம் பேரானந்தமாகிய முத்தி வரும் என்றால் அந்த காற்றினையே சுவாசித்து வாழும் பாம்புகளுக்கு அந்த முத்திப் பயன் கிடைக்கும் என்பதில் என்ன சந்தேகம்! ஆதலால் இத்தகைய கருமங்களைச் செய்பவர்களுக்கு அடர்ந்த கொடியதான பெரிய மாயை யானது நீங்காமல் இருந்துகொண்டு அலைக்கழிக்கும். (51)

***

வெய்யமா யையைவெல் லாமல்
விளங்குமெய்ஞ் ஞானம் தோன்றா(து)
ஐய(ம்)இல் அதுதோன் றாமல்
அருமையாம் முத்தி எய்தா(து)
துய்யவெவ் வேறு மார்க்கத்(து)
உழலுவார் அன்றிச் சற்றும்
பொய்யினைப் பொய்என்(று) ஓரும்
புந்தியோர் அரியர் ஆவார். (52)

எவர்க்கும் கொடிய மாயைதனை வெற்றி கொள்ளாமல் விளங்குகின்ற மெய்ஞ்ஞானம் வராது. இதில் சந்தேகம் இல்லை. அந்த ஞானம் இன்றி அருமையான முத்தி உண்டாகாது. வெவ்வேறு மார்க்கங்களிலும் பயிற்சி செய்வார்களே தவிர கொஞ்சமும் (மாயையின் காரியமான பிரபஞ்சம் முதலான) பொய்யினைப் பொய் என்று ஆராய்ந்து அறியும் புத்தி உடையவர் அரிதிலும் அரிதாகவே காணப்படுவர். (52)

***

எத்தனை இயம்பி னாலும்
என்பயன் அகண்டா னந்த
நித்திரை யாகும் சாந்தி
நிறைந்(து)உளும் புறம்பு(ம்) அல்லாச்
சுத்தமெய்ஞ் ஞானம் தானாத்
துலங்குமா தூயர்க் கேநல்
முத்திஉண் டாகும் எல்லா
மோகமும் அகலும் மாணா. *(53)*

மாணவனே! எத்தனை விதமாகச் சொன்னாலும் அதனால் என்ன பயன்? அகண்ட ஆனந்தம் என்னும் உணர்வுடைய நித்திரையில் சாந்தி நிறைந்து பொங்கி வழிய உட்புறம் வெளிப்புறம் என்ற துவந்துவம் (இருமைகள்) இல்லாத நிலையில் சுத்த மெய்ஞ்ஞானம் தோன்ற, தானே அதுவாக மாத்திரம் நிலைத்து நிற்கும் நிலையுடைய தூயவர்களுக்கே சென்மம் தொடரா முத்தி உண்டாகும். அதன் பின்பு எல்லா மோகங்களும் அகன்றுவிடும். (53)

***

(எண்சீர் ஆசிரிய விருத்தம்)

இத்தகைய தாம்சீவன் முத்தி தானும்
ஏராள மாநூல்கள் ஆராய்ந் தாலும்
நித்தமும்நல் காசிகயா பிரயா கைக்கண்
நிலைத்திடினும் இல்லறத்தை நீத்திட் டாலும்
மெத்தமெத்தப் பசிதாகம் அடக்கி னாலும்
மேதினியில் சிலைகளைஆ ராதித் தாலும்
சத்த(ம்)அறத் திகம்பரராய்ச் சரித்திட் டாலும்
சடைமுடியை வளர்த்தாலும் விடுமோ மாயை. *(54)*

இத்தகைய சீவன் முத்திக்காக அனேக சாத்திரங்களை ஆராய்ச்சி செய்வதாலும், தினமும் காசி கயா பிரயாகை முதலிய தலங்களில் வசிப்பதாலும், இல்லறத்தைத் துறப்பதாலும், திரும்பத் திரும்ப பசி தாகம் இவற்றை அடக்குவதாலும், உலகில் சிலைகளை வழிபட்டு ஆராதனை செய்வதாலும், பேசாமல் இருந்து நிர்வாணமாகச் சுற்றிவந்தாலும், தலை முடியை நீண்டதாக வளர்த்துக் கொள்வதாலும் காரணமான மாயை நீங்கிப் போகுமோ? போகாது. (54)

***

சந்ததமும் காடுமலை முழைவா யின்கண்
சஞ்சரித்தா லும்பெரிய விரதத் தாலும்
அந்த(ம்)இலாத் தவம்தானம் சபங்க ளாலும்
அரியமகங் களினாலும் அடத்தி னாலும்
எந்தமதங் களினாலும் சவைக்(கு)அஞ் சாத
இனியபிர சங்கங்கள் இயற்ற லாலும்
விந்தையுறு மகிமைகளி னாலும் செய்யும்
வினைகள்பல பலவாலும் விடுமோ மாயை. *(55)*

எப்பொழுதும் காடு மலை குகைகளில் (அமைதிபெற) இருந்தாலும், (தேகத்தை வருத்திக் கொண்டு) பெரிய

விரதங்கள் இருப்பதாலும், முடிவின்றித் தவம் தானம் செபம் செய்வதாலும், (பலன் எதிர்பார்த்து செய்வதால் சொர்க்கமும், நிஷ்காமமாக செய்வதால் அந்தக்கரண சுத்தமும் கிடைக்கவும்) அரிதான யாகங்கள் செய்வதாலும், (மனம் ஒருநிலைப்படுதற்கு உதவும்) அடயோகத்தாலும், மற்ற எந்த சமயங்களைச் சார்ந்து செயல்படுவதாலும், சபையில் உள்ள பெரியோர்களுக்கு அஞ்சாமல் ரசிக்கின்றவாறு சொற்பொழிவுகள் ஆற்றினாலும், ஆச்சரியம் கொள்ளத் தகுந்த பல செயல்களைச் செய்து காட்டுவதாலும், செய்கின்ற விதம் விதமான பலப் பல கர்மங்களாலும் மாயை நீங்குமோ? (நீங்காது) (55)

***

ஐயனே இவைஅனைத்தும் முத்திக்(கு) ஏற்ற(து)
அன்(று)எனி(ல்)இங்(கு) அனைவோரும் அனுட்டிப் பானேன்
உய்யஎனக்(கு) அருள்புரியும் என்பா யாகில்
உறுதியுற அனுட்டிப்பார்க்(கு) உயர்விண் ணாட்டில்
துய்யபல போகங்கள் அனுபோ கிக்கத்
துணையாம்அப் புண்ணியங்கள் தொலையும் காலை
வெய்யபிறப் பினில்மீளத் திரும்பல் வேண்டும்
வேதமும்இவ் வாறாக விளம்பா நிற்கும். (56)

ஐயனே! இந்த செயல்கள் அனைத்தும் முத்திக்கு ஏற்றது அல்ல என்றால் உலகில் எல்லாரும் கடைப்பிடிப்பது ஏன்? அடியேன் உய்யுமாறு அருள்வீர் என்று கேட்டால் உறுதியாகப் பின்பற்றுபவர்களுக்கு உயர்ந்த தேவ லோகத்தில் சிறந்த பல போகங்களை அனுபவிக்க உதவிகரமாக அமையும். அந்தப் புண்ணியம் தீர்ந்து போன பின்பு கொடிய பிறப்புக்கு மறுபடியும் திரும்பி வர வேண்டும். இவ்வாறு தான் வேதங்களும் சொல்கின்றன. *(56)*

***

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

மேதினிக் குள்ளே வர்க்கும்
விவகார ஞானம் இன்றிக்
கோதிலாப் பயன்கள் எய்தக்
கூடாதோ அவ்வா றாக
ஓதரும் பிரம ஞானம்
உள்ளுறக் கொள்ளா தார்க்கு
வேதரா சியமா முத்தி
வெறும்கன(வு) எனப்பொய் யாமே. (57)

உலகமாந்தர் எவர்க்கும் அந்தந்த பொருள்களின் அல்லது விஷயங்களின் அனுபவம் இல்லாமல் குற்றமிலாத பயன்கள் கிடைக்காது. அப்படி, சொல்லி விளங்க வைக்க முடியாத பிரம்ம ஞானத்தை உள்ளத்தில் கொண்டு வராதவர்களுக்கு வேத உட்கருத்தான முத்தி அடைவது என்பது வெறும்கனவு போல் பொய்யாகி விடும். (57)

***

சுத்தமா கியகூ டத்த
சொருபக அறிவின் பாலில்
நித்தம்கற் பிக்கப் பட்ட
நிலையிலாச் சீவ போதம்
மித்தைஎன்(று) அறிவால் தள்ளி
மிளிரும்கூ டத்த ரூப
சித்(து)அதாய் இலங்கும் தூயோன்
சிறந்தமெய்ஞ் ஞான வானாம். (58)

சுத்தமான ஆத்ம வடிவ அறிவில் எப்போதும் கற்பிக்கப்பட்ட (கற்பனை செய்யப்பட்ட) நிலையில்லாத சீவனின் புறஞானம் பொய் என்று விசார அறிவால் ஒதுக்கி, ஒளிர்கின்ற ஆத்ம வடிவ அறிவாய் விளங்கும் பரிசுத்த மேலோன் சிறந்த மெய்ஞ்ஞானி ஆவான். (58)

***

இப்பரி(சு) அறிந்தோன் ஆகி
எவன்வெளிப் பிரக்ஞை யோடே
ஒப்பற விளங்கா நின்ற
உள்பிரஞ் ஞையும்ஒ ழித்துத்
தப்பற ஏக மாகத்
தயங்குப்ரஞ் ஞையில்ஆழ் வானோ
அப்பெரி யோனே எல்லாம்
அடைந்தமெய்ஞ் ஞானி ஆவன். (59)

இதனை அறிந்தவன் ஆகி, எவன் வெளிப்புற உணர்வு மற்றும் உள்முக உணர்வு இரண்டையும் (துவந்துவம்) ஒழித்து, (பழைய படி உணர்வு-கவனம்) திரும்பாமல் ஏகமாக விளங்கும் உணர்வில் (பிரக்ஞையில்) ஆழ்ந்திருக்கின்றானோ அந்தப் பெரியவனே எல்லாம் அடைந்த ஞானி ஆவான் (59)

***

(கலிவிருத்தம்)

ஐய னேமகம் ஆதிகன் மங்கட்கும்
செய்யு நல்நிய மாதியோ கங்கட்கும்
துய்ய ஞானம் உயர்(வு)எனச் சாற்றினீர்
வெய்ய னேற்(கு)அவ் விவரம் இயம்புவீர். (60)

(சீடன் கேட்டல்) ஐயனே! யாகம் செய்தல் முதலான கர்மங்களைக் காட்டிலும், நல்ல இயமம் நியமம் முதலான யோகங்களைக் காட்டிலும் சிறந்த ஞானமே உயர்ந்தது எனக் கூறினீர். கொடியவனாகிய எனக்கு அந்த விவரத்தைக் கூறி அருள்வீர். (60)

***

(எண்சீர் ஆசிரிய விருத்தம்)

கண்மணியே கேட்டிடுவாய் நீரும் பாலும்
கலந்(து)ஒன்றாத் தோன்றுவ(து)ஒத்(து) இலங்கா நின்ற
விண்அனைய ஆன்மாவும் தேகம் ஆதி
வெய்யவிகா ரங்களும்சேர்ந்(து) ஒன்றாத் தோன்றும்
நண்ணவற்றை வெவ்வேறாகப் பிரித்துப் பாலை
நலமுறக்கொள் ஓதிமம்போல் இல(கு)ஆன் மாவைப்
புண்ணுறும்தே கம்கர(ண)ஆ திகளைத் தள்ளிப்
பொறுமையுறப் பெறுவதுநற் போதம் ஆமே. (61)

கண்மணி போன்றவனே! கேட்பாய். நீரும் பாலும் கலந்து (பேதம் தெரியாமல்) ஒன்றாகத் தெரிவது போல், ஆகாயம் போல மாறுபாடின்றிய ஆன்மாவும், மாறுபடுகின்ற தேகம் இந்திரியங்கள் முதலியவற்றுடன் சேர்ந்து ஒன்றாகத் தோன்றுகிறது. நலம் பெறப் பாலில் கலந்துள்ள நீரினைப் பிரித்து, நீரினை விடுத்துப் பாலை மட்டும் குடிக்கின்ற அன்னப்பறவை போல், (தத்துவ விசாரத்தால்) சதையால் ஆன தேகம் கரணம் முதலியவற்றை (இவை நான் அல்ல என்று) பொறுமையுடன் நீக்கி ஆன்மாவை அறிவதே சிறந்த ஞானம் ஆகும். (61)

***

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

அரிய பாலையும் நீரையும் பிரித்திடற்(கு)
அறிகிலா(து) ஒன்றாகப்
பிரிய மேற்கொ(டு)உட் கொளும்கழு(கு) ஆதிகள்
பெற்றிபோல் ஆன்மாவை
உரிய வானதே(க) இந்திரி யங்களை
உத்தியாய்ப் பிரிக்காமல்
எரிகொ(ள்) தேக(ம்)ஆன் மாஇவை
ஒன்(று)என எண்ணலே அஞ்ஞானம். (62)

பாலையும் நீரையும் தனித் தனியாகப் பிரிப்பதற்கு அறியாமல் பிரியமுடன் பால் நீர் சேர்த்தே அருந்துகின்ற கழுகு, பருந்து முதலியவற்றைப் போல, ஆன்மா, தேகம் இந்திரியங்கள் இவைகளை விசார உத்தியால் பிரிக்க முடியாமல், நெருப்புக்கு இரையாகி அழிகின்ற தேகம், நித்தியமான ஆன்மா இவை ஒன்று என்று கருதுவதே அஞ்ஞானம் ஆகும். (62)

***

அருமை யாகிய ஆத்துமா ஈ(து)என்றும்
அனாத்துமா ஈ(து)என்றும்
குருமு கத்தி(ன்)ஓர்ந் திடும்சுபோ தத்தினால்
கொடும்பவம் அறு(ம்)அன்றி
மருவும் இ∴திலா(து) அனந்தநூல் சிரவண
மனனஞா னத்தாலும்
பொரு(வு)இல் மற்(று)எத னாலு(ம்)எப் பவத்தினும்
புனிதமாம் கதிஇன்றே. *(63)*

(மனம் வாக்குக்கு எட்டாத) அருமையான ஆன்மா இது எனவும், அனாத்மா இது எனவும் குருவினைச் சரண் அடைந்து விசாரத்தினால் பெற்ற தூய ஞானத்தினால் கொடும்பிறவித் தொடர் அற்றுப் போகும். இதனைத் தவிர்த்து அனேக நூல்களைப் படிப்பதாலும், சிந்திப் பதாலும், ஞானத்திற்கு ஒத்தவாறு உதவிடாத மற்று எத னாலும் எந்தப் பிறவியிலும் புனித நற்கதி கிடைக்காது. ***(63)***

***

தேசி(க) உத்தம னேஉம(து) உரைப்படி
தெளிந்துஞா னிகள்ஆனோர்க்(கு)
ஆ(சு)இ லாதஎண் சித்தியும் தூரத்தில்
அமர்வன நிதம்பார்த்தல்

பேசு கின்றதூ ரச்சிர வணம்செயல்
பின்னு(ம்)உள் ளவையாவும்
வீசு நற்புகழ் பெறவரு மோஇதன்
விவரமும் அருள்வீரே. (64)

(சீடன் கேட்டல்) ஆசாரியர்களில் சிறந்தவரே! தாங்கள் உரைத்தற்கு ஏற்ப தெளிந்து ஞானிகள் ஆன வர்க்கு, எட்டு வகை சித்திகளும், தொலைவில் நடப்பதைக் காணும் ஆற்றலும், தூரத்தில் பேசும் பேச்சினைக் கேட்கின்ற ஆற்றலும், மற்றும் உள்ள சக்திகளும் பரவிய புகழும் வரப்பெறுமோ? இதன் விவரத்தை அருள்வீர். (64)

***

சோர னாகிய புருடனை வசம்செயும்
சோரநா யகிபோலத்
தூர வத்துவின் தரிசனம் முதலிய
தொடர்மகி மைகள்பெற்றோர்
கோர மாகிய மனம்தினம் காமமாம்
கொடியபேய்க்(கு) ஆளாகிச்
சீ(ர்)அ றக்கெடும் ஆதலால் பெரியர்தாம்
சித்திகள் விரும்பாரே. (65)

கள்ள புருடனைத் தன்வசம் செய்த கள்ள மனைவியைப் போல தூரத்தில் நடப்பவற்றை அறிதல் முதலான சித்திகளை அடைந்தவர்களின் கோரமாகிய மனம் தினமும் ஆசையாகிய கொடும்பேய்க்கு ஆளாகிப் பெற்ற சிறப்பு அனைத்தும் கெடும், ஆதலால் ஞானிகள் அத்தகைய சித்திகளை விரும்பமாட்டார்கள். (65)

***

தேக மான(து)அ நித்தியம் என்பதைத்
தெரிகிலா(து) அடம்ஆதி
யோக மூலமாச் சித்திகள் அடைவதே
உசிதமாக் கொடுமாயா

மோக வாரியில் ஆழ்ந்(து)இடர்ப் படும்அவர்
மூடரே அல(து)உண்மை
யாக ஞானயோ கத்தினை அறிந்துவீ(டு)
அடைவிருப் பினர்அன்றே. (66)

தேகம் நிரந்தரமானது அல்ல என்பதைத் தெரிந்து கொள்ளாதவர் அடயோகம் முதலான யோக மார்க்கங்களில் சென்று சித்திகள் அடைவது மேன்மையாம் என்று கருதிக் கொண்டு, மாயை என்னும் மோகக் கடலில் அழுந்தி பிறவிகளில் உழன்று துன்பப்படுவர். அவர்கள் மூடர்களே தவிர சிரத்தையோடு ஞானமார்க்கத்தின் படி பயிற்சி செய்து முத்தி அடைய விருப்பம் இல்லாதவர் ஆவர். (66)

***

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

ஆகாய கமனம் ஆதி
அரியசித் திகளை எய்திச்
சாகாமல் நெடுநாள் உய்யச்
சபலஆ சையின்பாற் பட்டோர்
வாகாரும் ஞானம் இன்றி
மந்திர தந்தி ரங்கள்
தேகாந்தம் அளவும் தேடித்
திரும்பவும் உதித்து மாய்வார். (67)

ஆகாயத்தில் நடத்தல் முதலான அரிய சித்திகளை அடைந்து நீண்ட நாள் உயிருடன் வாழவேண்டும் என்று சபலப்பட்டு அற்புதமான ஞானம் இல்லாமல் மந்திர தந்திரங்களைத் தேகம் இருக்கும் அளவும் தேடித் திரிந்து மறுபடியும் பிறந்து பிறந்து மாள்வர். (67)

***

கருதுசித் திகள்அ னைத்தும்
கான்றபோ னகம்போல் நீத்துப்
பெரு(கு)இவை எமக்(கு)ஏன் என்று
பிரமஆ னந்தம் பெற்றி(ங்)கு
ஒருபொரு ளையும்எண் ணாமல்
உய்யுமெய்ஞ் ஞானிக்(கு) அன்றோ
பொருவிலா முத்தி வாய்க்கும்
புல்லியர்க்(கு) இதுதோன் றாதே. (68)

உண்டு கக்கிய சாதம்போல் விரும்பும் சித்திகள் எல்லாம் துயரத்தைக் கூட்டுகின்ற தன்மையது இவைகள் நமக்கு ஏன் என்று நீக்கி, பிரம்மானந்தம் பெற்று, உலகில் எதனையும் நினைக்காமல் வாழும் மெய்ஞ்ஞானிகளுக்கு அல்லவா நிகரில்லாத முத்தி வந்து வாய்க்கும். அற்பருக்கு இது தெரிய வராது. (68)

***

மாயைதான் முத்தி அன்று
மகிமைகள் முத்தி அன்று
நேயமாக் கல்வி கற்கும்
நினைவுகள் முத்தி அன்று
தூயமுத் திய(து)அஞ் ஞானம்
தொலைந்திடல் எனஇ வற்றைச்
சீயென வெறுத்து நல்லோர்
சின்மய மாய்வாழ் வாரே. (69)

மாயை என்பது முத்தி அல்ல. மகிமை நிறைந்த சித்திகள் முத்தி அல்ல. ஆர்வமுடன் கல்வி கற்கும் நினைவும் முத்தி அல்ல. அஞ்ஞானத்தைத் தொலைப்பதுவே தூயமுத்தி என்று அறிந்து மேற்சொன்னவற்றை எல்லாம் "ச்சீ" என்று வெறுத்து ஒதுக்கி நல்லவர் உண்மையான அறிவு வடிவாய் வாழ்வர். (69)

***

காயசித் திகள்இ யற்றிக்
கடவுள்போல் அழிவில் லாமல்
தூயராய் எக்கா லத்தும்
துலங்குவோர் துறவோர் அல்லார்
சீயெனப் பலரும் ஏசச்
செத்(து)உழல் பவர்அன்(று) என்றே
வா(ய்)அடங் காமல் சில்லோர்
வாதிடல் ஏதோ சொல்வீர். *(70)*

(சீடன் கேட்டல்) காய சித்திகள் செய்து கடவுள் போல் அழிவில்லாமல் எக்காலத்திலும் வாழ்பவர்களே துறவிகள் ஆவார். மற்றவர்கள் பலரும் "ச்சீ" என்று இகழ்ந்து பேச உழன்று மடிபவர்கள். இவர்கள் துறவிகள் ஆகார் என்று சிலர் வார்த்தைகளை அடக்காமல் வாதிடுவது ஏன் என்பதைச் சொல்வீர். (70)

உரைசெயும் பிராணா யாம
யோகத்தால் காற்றை வென்றோர்
தரையினில் சிலகா லம்பொய்த்
தாண்டவம் புரிந்து நாய்போல்
திரிவ(து)அல் லாமல் காய
சித்தியோர் கனவின் கண்ணும்
சுரரு(ம்)எய் தின(து)இன்(று) அந்தச்
சோம்பர்தம் சொலைநம் பாதே. *(71)*

(ஆசாரியர் அருளல்) (அலைகின்ற மனம் அடங்கும் வழி எனச்) சொல்லப்படும் பிராணாயாமப் பயிற்சியினால் சுவாசத்தை ஒழுங்குபடுத்தி வெற்றி கண்டவர்கள் உலகில் சில காலம் பொய்யாகத் தாண்டவம் ஆடி, நாய் போல் திரிவதைத் தவிர, காய சித்தியைத் தேவர்களும்

கனவிலேனும் அடைந்ததில்லை. ஆதலால் அப்படிக் கூறுகின்ற சோம்பேறிகளின் வார்த்தையை நீ நம்பாதே. (71)

***

நீரின்மேல் குமிழி போலும்
நிலையிலாக் காயம் நம்பிப்
பாரினில் சித்திக் காகப்
பாமரர் படும்பா(டு) எண்ணில்
சீரிய காற்றைப் பொத்தல்
சீலையில் முட்டை கட்டி
ஓரிடத்(து) அழிவி லாமல்
ஒளித்துவைத் தலையே ஒக்கும். *(72)*

நீரில் தோன்றும் நீர்க்குமிழிகள் கணநேரம் கூட நிலைக்காதது போல, நிலையில்லாத இந்த தேகத்தை நம்பி, உலகில் காய சித்திக்காகச் சாதாரண மக்கள் படும் பாட்டை எண்ணிப் பார்த்தால், சிறந்த காற்றினைக் கிழிந்து நைந்து போன துணியில் முட்டையாகக் கட்டி ஒரு இடத்தில் அழியாதவாறு ஒளித்து வைப்பதற்கு நிகராகும். (72)

***

(எண்சீர் ஆசிரிய விருத்தம்)

குருபரனே மகிமையிலா மெய்ஞ்ஞா னிக்குக்
குவலயத்தோர் அஞ்சிஒன்றும் கொடுத்தற்(கு) எண்ணார்
அருகிலும்சேர்ந்(து) உபசரியார் அற்பர்க்(கு) ஒப்பாய்
அலட்சியம்செய் வார்இதனால் அவரும் சித்தி
மருவிஅல கில்மகிமை வகித்(து)இப் பூமி
மன்னவரும் மதித்(து)இறைஞ்ச மெய்ஞ்ஞா னத்தைத்
தருமுயற்சி யும்புரியில் குறைதான் உண்டோ
தண்ணருளோ டேஇதற்(கு)உத் தரம்சொல் வீரே. (73)

(சீடன் கேட்டல்) குருபிரானே! (சித்திகளின்) மகிமை இல்லாத மெய்ஞ்ஞானிகளுக்குப் பயந்து எதையும் உலகத்தோர் கொடுக்க நினைக்கமாட்டார்கள். அவர் அருகில் சென்று உபசரிக்கவும் செய்யார். அற்பரைப் போல் கருதி அலட்சியம் செய்வார். அதனால் அந்த ஞானியரும் சித்திகளை அடைந்து மகிமை பலவும் கொண்டு திகழ்ந்து பூமியை அரசாளும் மன்னவரும் அவரை மதித்து வணங்கும் வண்ணம் மெய்ஞ்ஞானத்தைத் தரும் முயற்சி செய்தால் அதில் குறை ஏதாவது உண்டோ? கருணையுடன் இந்த சந்தேகத்திற்கு விடை அருளுவீர். (73)

***

சிரம்புழுத்துச் சீஒழுகும் சுணங்கன் தேகம்
சீலமிகும் ஒருமறையோன் சிரத்தில் சேர்த்தி
உரம்பெறவீக் கிடில்அதனை அவிழ்த்துத் தள்ளி
ஓடுவ(ன்)அல் லா(து)உளத்(து)ஊ(டு) உவப்பான் கொல்லோ
நரம்புதசை எலும்(பு)உதிரம் முதலாம் தீய
நாற்ற(ம்)உறு மலஉடலின் நாசம் தேர்ந்து
திரம்பெறுமெய்ஞ் ஞானிய(ர்)ஓர் கனவின் கண்ணும்
தெள்ளியசித் திக(ள்)உறினும் கொள்ளார் அன்றே. (74)

(ஆசாரியர் அருளல்) தலை அழுகி சீழ் வடியும் நாயின் உடலை, ஒழுக்கம் உள்ள ஒரு அந்தணின் தலையில் கெட்டியாகச் சேர்த்து கட்டினால், அவன் அதனை அவிழ்த்து உதறிவிட்டு ஓடுவானே தவிர உள்ளத்தில் மகிழ்வானா? மகிழ்ச்சி அடையமாட்டான். அவ்வாறே, நரம்பு தசை எலும்பு ரத்தம் முதலான தீய துர்நாற்றம் வீசுகின்ற மலம் உடைய உடலின் அழிவினை ஆராய்ந்து அறிந்து, திடமான மெய்ஞ்ஞானியர் கனவிலும் சித்திகள் அடைவதாகக் கண்டாலும் அதைக்கூட ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். (74)

***

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

ஆயிரம் உரைகள் உரைத்து(ம்)என் பயனாம்
அனைத்தையும் பொய்யெனத் துறந்த
தூய(ர்)அந் தணராம் தோன்று(ம்)இவ் வுலகம்
தொல்பறைச் சேரியாம் என்னில்
போய்இனி எந்த மகிமைகள் எவர்பால்
புகழ்பெறக் காட்டுவர் அந்தோ
வாய்இனி அடக்கி ஞானஆ னந்த
வாழ்வினைப் பொருந்திடு வாயே. (75)

ஆயிரம் தான் எடுத்துச் சொன்னாலும் என்ன பயன்? அனைத்தையும் பொய் என்று துறந்த தூயவர், அந்தணர் ஆவர் என்றும், தெரிகின்ற இந்த உலகம் பழைய பறைச்சேரி என்றும் சாத்திரங்கள் கூறுமாயின், ஞானிகள் எந்த மகிமையை எவரிடம் சென்று புகழ்பெறக் காட்டுவார்கள்? ஐயகோ! அதனால் வாய் பேசாமல் (சந்தேகத்தை ஒழித்து) ஞானானந்த வாழ்வினைச் சேர்ந்திடுவாய். (75)

***

என்னுயிர்க்(கு) உயிராய் இலங்கிடு எந்தாய்
எளியனேன் இதுவரை இயம்பும்
புன்மொழி அனைத்தும் பொறுத்தருள் புரிந்து
பூரணா னந்தவாழ்(வு) அளிப்பீர்
என்னலும் அன்னோன் உவ்வியில் கரம்வைத்(து)
இணையறும் ஒருமொழி அதனால்
பன்னுதற்(கு) அரிய அகண்டபூ ரணமாம்
பரம்பொருள் நீஎனப் பகர்ந்தான். (76)

"அடியேன் உயிர்க்கு உயிராய் விளங்கிடும் எனது தந்தையே! சிறியேன் இதுவரையில் கேள்வியாகக் கேட்ட

இழிந்த சொற்கள் அனைத்தையும் பொறுத்து அருள்புரிந்து பரிபூரண ஆனந்த வாழ்வினை எனக்கு அளிப்பீர்" என்று சீடன் வேண்டவும், குருவானவர் அவனது தலையில் கைவைத்து நிகரில்லாத 'தத்துவமசி' என்ற மகாவாக்கிய விசாரத்தினால் ஆராய்வதற்கு அரிய அகண்ட பூரணமாம் பரம்பொருள் அதாவது 'பரப்பிரம்மம் நீ' என்று அருளிச்செய்தார். (76)

***

அருளிய படியே அச்சுதா னந்தம்
அகம்என மனன(ம்)ஆற் றிளலாப்
பொருளையும் விழுங்கிப் பாற்கடல் போலப்
பொங்கிளங்(கு) எங்கணும் பொலியும்
கரு(து)அரு பர(ம)ஆ காசமே தானாக்
காசினி வாழ்(வு)எலாம் துறந்து
குருபரன் உபய பதமலர் அகலாக்
கொள்கையோன் ஆகிவாழ்ந்(து) இருந்தான். (77)

ஆசாரியர் அருளியவாறு அழிவற்ற 'ஆனந்த வடிவம் நான்' எனச் சிந்தித்து, எல்லாப் பொருள்களையும் தன்னுள் அடக்கிக் கொண்ட பாற்கடல் போல பொங்கி எங்கெங்கும் விளங்குகின்ற கருதுவதற்கு அரிய அந்த பரம ஆகாசமே தானாகி உலக வாழ்வு எல்லாம் துறந்து, ஆசாரியரின் இரு மலர்ப்பாதங்களையும் நீங்காதவன் ஆகி (ஆசாரியன் அருளியதைப் பின்பற்றி)வாழ்ந்து வந்தான். *(77)*

***

(எண்சீர் ஆசிரிய விருத்தம்)

காராரும் மேனியனாப் பிறைபோல் அம்பும்
கார்முகமும் தனதுதிருக் கரத்தில் மின்னச்
சீராரும் செழும்சுடர்போல் என(து)உள் ளத்தில்
சிறுபொழுதே குடிபுகுந்த சீரா மன்தன்

பேராரும் நல்லருளால் சொலு(ம்)இந் நூலைப்
பிரிய(ம்)உறப் படிப்பவரும் கேட்போர் யாரும்
ஏராரும் அச்(சு)எழுத்தில் பதிப்பிப் போரும்
இணையறுமார்க் கண்டனைப்போல் இனிதாய் வாழ்வர். (78)

கார்மேகம் போன்ற திருமேனி உடையவனாய், மூன்றாம் பிறைச் சந்திரனைப் போன்ற அம்பும், வில்லும் தனது திருக்கரத்தில் மின்ன, சிறந்த செஞ்சுடர் போல் எனது உள்ளத்தில் சிறுவயதிலேயே குடிபுகுந்த சீராமனின் பெரும் திருவருளினால் உரைக்கும் இந்த நூலினைப் பிரியமுடன் படிப்பவரும், கேட்பவரும், அழகிய அச்சு எழுத்தில் பதிப்பித்து (நூல் வடிவில்) அளிப்பவரும் நிகரில்லாத மார்க்கண்டேயனைப் போல என்றும் சுகமாக வாழ்வார்கள். (78)

(முற்றும்)

பாடல் முதற்குறிப்பு அட்டவணை

பாடல் முதல் சீர்	பாடல் எண்	பாடல் முதல்சீர்	பாடல் எண்
அகமுகத் தறி	26	எவ்விடத்தில்	5
அகிலமும்	49	எறிந்து அலை	3
அரிய ஞானம்	25	என்னுயிரக்கு	76
அரிய பாலை	62	ஐயனே இவை	56
அருமையாகிய	63	ஐயனே மகம்	60
அருளியபடி	77	ஓதுகின்ற	34
அற்றம் அறு	13	ஒன்பது வாயில்	31
அன்புடன்	42	கண்மணியே	61
ஆகாய கமன	67	கருது சித்தி	68
ஆயிரம் உரை	75	காடு அடைந்தி	39
ஆனனம் கமல	10	காதலால் தமை	9
இத்தகையதா	54	காய சித்தி	70
இத்திறமான	45	காராரு மேனி	78
இந்நன்னெறி	47	குருபரனே	73
இப்பரிசு	59	குவலயத்தில்	38
இன்னவர்	12	கேட்டிநன்மகனே	8
உரைசெயும்	71	சகதலத்தில்	27
எங்கணும்	16	சகலமும் மித்தை	33
எட்டெழுத்தில்	36	சத்தியம் பொறை	4
எதிர் உறும்	15	சந்ததமும்	55
எத்தனை இயம்பி	53	சிரம்புழுத்து	74

பாடல் முதல் சீர்	பாடல் எண்	பாடல் முதல் சீர்	பாடல் எண்
சுத்தமாகிய	28	புண்ணியம் தரிச	17
சோரனாகிய	65	பூதலத்தில்	20
ஞானி என்றும்	7	பெரியவர்கள்	2
திருத்தியாய்	48	பேசரு மாயை	22
திருந்தவே	32	பொருள்தனைஈட்டல்	19
திருவருள் கடலா	1	போகத்தில் இச்	30
தெருளுடை அடி	6	மதியால் அதி	35
தேகமானத	66	மற்றவர்க்கு உரிய	41
தேசிக உத்தம	64	மாகலைகட்கு	29
துரிசிலாத	24	மாயை தான்	69
நலமிகு ஞான	21	மெய்யிதேல் தந்	28
நித்தமும் அலந்	23	மேதினிக்குள்	57
நீரிடைக் கமலம்	16	மேதையர் அந்நல்	18
நீரினிடம்	50	வஞ்சகம் பேர்	11
நீரின் மேல்	72	வாரணத்தின்	37
பாந்தளைக்	40	வால்நிற ஓதி	44
பின்னும் காற்றை	51	வீடு அடையும்	14
புண்ணிய கன்மம்	43	வெய்ய மாயை	52

***

சுவாமி அச்சுதாசர் வரலாறு

மகான் சம்பத்கிரி பிரமபீடம் சுவாமி அச்சுதாசர் வடஆர்க்காடு மாவட்டம் போளூரில் பலிஜா நாயுடு மரபில் அவதரித்து, அப்பாய் நாயுடு என்ற பெயரில் வளர்ந்தவர். இவர் பிறந்த காலக்குறிப்பும் பெற்றோர்கள் குறிப்பும் கிடைக்கப் பெறவில்லை. உறவினர்கள் கூறியதைக் கொண்டு கி.பி.1850 சாதாரண ஆண்டில் பிறந்தவர் என்பது தெரிகிறது.

சுவாமிகள் குழந்தைப் பருவத்திலேயே தந்தையாரை இழந்து, தாயார் அரவணைப்பில் வளர்ந்தார். காலதாமதமாகவே பள்ளியில் சேர்க்கப்பட்டும், முன் பிறவி வாசனைகளால் ஆசிரியர் பாராட்டும்படி தமிழ் தெலுங்கு இருமொழிகளிலும் நன்கு தேர்ச்சி பெற்றார். கூரிய அறிவு, நேரிய பண்பு, நல்லொழுக்கம், இராம பக்தி கொண்டவராகத் திகழ்ந்தார். சுவாமிகளின் தாயாரும் மறைந்து விடவே, பள்ளி ஆசிரியராகச் சேர்ந்து கல்வி போதித்து வரப்பெற்ற வருவாயில் வாழ்க்கை நடத்தினார். மேலும் புலவர் பெருமக்களை அடுத்து வடமொழி கற்றுத் தேர்ந்தார். இசையிலும் வல்லவர் ஆனார். பின்பு ஆசிரியர் பணியையும் விடுத்து, பஜனைக்கூடம் ஒன்றை நிறுவி, இராமர் திருவுருவம் முன்பு தமிழ் தெலுங்கு மொழிகளில் பல கீர்த்தனைகளையும் தோத்திரப் பாடல்களையும் இயற்றினார். பிரகலாதர், துருவன், சக்குபாய் வாழ்க்கை சரித்திரத்தை எழுதி கேட்பவர் உள்ளம் கவரும் வண்ணம் சொற்பொழிவு செய்து வந்தார்.

அந்நாளில் வடஆர்க்காடு மாவட்டம் வேலூர் நகரை அடுத்த கஸ்பாவில் கல்வி கேள்விகளில் சிறந்து பிரசித்தி

பெற்றிருந்த வேங்கட கிருஷ்ண தாசர் என்னும் வைணவப் பெரியாரைத் தரிசித்தார். சுவாமிகளின் கல்வியறிவு, கவித்திறன், இசைப்புலமை, இராம பக்தி ஆகியவற்றைக் கண்ட அந்த பெரியவர், "இன்று முதல் அச்சுதாசர் என்ற பெயர் நிலைக்கட்டும்" என்று வாழ்த்தி அருள, விடை பெற்று மீண்டும் போளூருக்கு வந்தார்.

சில ஆண்டுகள் கழிந்த நிலையில், உறவினர்களுள் சிலர் கூடி, சுவாமிகளுக்கு ஆரணி வட்டம் கஸ்தம்பாடியில் அதே மரபில் 'தாயம்மை' என்ற கன்னியை மணமுடித்து வைக்க, சுவாமிகள் மாமனார் வீட்டிலேயே வாழ்ந்து வரலானார். அப்போது போளூர் வட்டம் பொத்தரை கிராமத்தில் 'வெங்கம்மையார்' என்பவரை அணுகி யோக நெறிகளைக் கற்று சில மாதங்களில், தரையிலிருந்து ஆறு அடி உயரம் எழும்பி, மீண்டும் கீழ் இறங்கும் பயிற்சியில் தேர்ச்சி அடைந்தார். திரும்பி வீட்டிற்கு வந்து தனி அறையில் தொடர்ந்து பயிற்சி செய்யலானார்.

சுவாமிகளின் துணைவியார் பூப்பெய்திய பின்பு, உறவினர்கள் உரிய சடங்குகளைச் செய்து நன்னாளில் இரவில் சுவாமிகளுடன் கூட்டுவிக்க, சுவாமிகளை அழைக்க தனி அறைக்குச் சென்று கதவைத் தட்டினார்கள். அந்த நேரத்தில் சுவாமிகள் யோகப் பயிற்சி செய்து, உயரத்திற்கு எழும்பி கீழ் இறங்கிக் கொண்டிருந்தார். அதனால் பதில் சொல்ல முடியவில்லை. உறவினர்கள் அதற்குள், கதவு திறக்கப்படாததால் வாயிலை இடித்து உட்புகுந்தனர். ஆரவாரத்தால் நிலைகுலைந்த சுவாமிகள் திடுமென்று கீழே விழுந்துவிட, வெளிப்பட வேண்டிய வாயுக்கள் பீஜத்தில் இறங்கி, பருத்துவிட, தாங்க முடியாத துன்பத்தால் அவதிக்கு உள்ளானார். இதைக் கண்டவர்களும் செய்வதறியாது திகைக்க, சுவாமிகள் சொன்னதன் பேரில், விரைந்து சென்று

'வெங்கம்மையாரை' அழைத்து வந்தனர். அவர் வழிகாட்டியபடி, சுவாமிகளும் முன்போலவே மேலெழுந்து கீழிறங்க வாயுக்கள் முறையாக வெளிப்பட தொல்லை நீங்கியது. சுவாமிகள் இந்த பயிற்சியை அத்துடன் கைவிட்டு விட்டார்.

சில தினங்கள் கழிய, ஒரு நாள் சுவாமிகள் தனித்திருந்த போது, முன் பிறவி வாசனைகளாலும் நல்வினைகளாலும் "நான் யார்? இந்த பிறப்பு இறப்புக்கு காரணம் என்ன? இந்தச் சுழலில் சிக்கி ஏன் தவிக்க வேண்டும்? இதற்கு என்ன வழி?" என்ற விசாரம் தோன்ற, சற்குருவை அடைவதே வழி என்ற சிந்தனை வந்தது. வட ஆர்க்காடு மாவட்டம் கடாமூர் அருகே கைலாயகிரியில் திடஞானம் அடைந்து கருணை உடையவராய் ஒரு மகான் விளங்குகிறார் என்பதைக் கேள்விப்பட்டு, உடனடியாகப் புறப்பட்டுச் சென்று, அந்த மகானைக் கண்டு வணங்கி வேண்டினார். அவரும் பஞ்ச கோசங்களுக்கு அப்பாலாய், அவத்தை மூன்றுக்கும் சாட்சியாய், சச்சிதானந்தமாய் விளங்கும் ஆத்ம சொருபத்தை விளக்கி உபதேசித்து தீட்சை கொடுத்தார். அக்கணமே சுவாமிகள் நிர்விகற்ப நிட்டை கைவரப்பெற்றார். அதைக் கண்ட ஆசாரியரும் நிர்விகற்ப நிட்டையில் மூழ்கினார். நாள் முழுதும் நிட்டையில் கழிய, மறுநாள் காலையில் முதலில் சுவாமிகள் நிட்டை கலைய, பின்னால் ஆசாரியர் எழுந்தார். தன்னுடைய நிஜ வடிவத்தை உள்ளங்கை நெல்லிக்கனி போல் தாமதமின்றி உணரச் செய்த ஆசானிடம் "இனி தாங்கள் நிஜானந்தர் என்ற பெயரில் விளங்குவீர்" என்று கூறி, அவரது பெயரில் பதிகம் ஒன்றை இயற்றி ஆசான் முன் சமர்ப்பித்து வணங்கினார். ஆசாரியரும் "நீரும் இனி அச்சுதானந்தன் என்ற பெயருடன் திகழ்வாயாக. தொடர்ந்து நிட்டை பழகுவாயாக" என்று அருள் செய்தார்,

குருவிடம் பிரியா விடைபெற்று, போளூரில் சம்பத்கிரி வந்து ஆறு மாத காலமும், பின்பு கஸ்தம்பாடியில் அழகான சோலையில் ஆறுமாத காலமும் நிட்டையில் இருந்தார். அப்போது நிஜானந்த குருவும் வந்து உடனிருந்து சந்தேகம் வரும் போது நிவர்த்தி செய்து, "சீடர்களில் மாணிக்கமே, நீ பிறவிப் பெருங்கடலைக் கடந்து விட்டாய்" என்று வாழ்த்தி கைலாயகிரிக்கு திரும்பினார்.

தன்னை அறிந்து ஆத்மசொரூபமாகவே திகழ்ந்த சுவாமிகள் சிலகாலம் படைவீடு ஆரண்யகத்தில் தங்கி, பின்பு வடஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், சித்தூர், செங்கல்பட்டு முதலான ஊர்களில் பயணம் செய்து அத்வைத சித்தாந்தத்தை தெளிவாக எடுத்துரைத்தார். அக்காலத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் அவரிடம் தத்துவ உபதேசம் பெற்றனர். இவ்வாறு பல ஆண்டுகள் கழிந்தன. கி.பி.1902- சுபகிருது ஆண்டு ஆவணி முதல் ஐப்பசி மாதம் வரை தம்முடைய மாணவர்கள் இருந்த ஊர்களுக்குச் சென்று "உங்களுடைய பொன்னான காலத்தை வீணடிக்காமல், ஆத்ம அனுபவம் பெறுவீர்" என்று அறிவுரைகள் வழங்கி, கார்த்திகை மாதம் வட ஆர்க்காடு மாவட்டம் வல்லம் கிராமத்திற்கு வந்தார். அங்கு 'சன்மார்க்க தர்ப்பணம்' என்னும் உயரிய நூலை எழுதினார்.

கார்த்திகை மாதம் 12-ஆம் நாள் வியாழக்கிழமை சுவாமிகள் விடியற்காலை நாகநதி சென்று காலைக் கடன்களை முடித்து விட்டு திரும்பும் போது ஓரிடத்தில் சற்று நின்று வெற்றிடத்தை நோக்கிவிட்டு இல்லம் வந்து சேர்ந்தார். 10-மணியளவில் அனைவரும் என்னை நேராகப் பார்க்குமாறு சொல்லிவிட்டு சுவாதி நட்சத்திரத்தில்

விதேகமுத்தி அடைந்தார். சுவாமிகளின் தேகத்தில் எந்தவித மாறுபாடும் உண்டாகவில்லை. இதைக்கண்ட மாணாக்கர்கள் செய்வது அறியாமல் அனைவருக்கும் செய்தி சொல்லி அனுப்பினர். மாலையில் சுவாமிகளின் மனைவியும் உறவினர்களும் வந்து சேர்ந்தனர். மக்கள் கூட்டம் வரத் தொடங்கியது. அனுபவம் வாய்ந்த மாணக்கர் ஒருவர் சுவாமி விதேக முத்தி அடைந்துவிட்டதைத் தெரியப்படுத்த, மறுநாள் வெள்ளிக்கிழமை தற்செயலாய் ஒரு அன்பர் கொண்டு வந்த கங்கை நீரினால் அபிசேகம் செய்து, பஜனை குழுக்கள், மக்கள் வெள்ளம் சூழ்ந்து வர, சுவாமிகள் முன்னாளில் நாகநதியிலிருந்து திரும்பும் போது வெற்றிடம் ஒன்றை நோக்கி நின்ற அந்த இடத்தில் சமாதி வைத்து சடங்குகள் செய்யப்பட்டது. அன்று முதல் பூசை செய்து வந்தனர்.

முதலாம் ஆண்டு நிறைவு விழாவுக்கு முன்பு, சுவாமிகளின் திருவுருவைத் தரிசிக்க பல மாணாக்கர்கள் ஆவல் கொண்டனர். அவர்களுள் 1.வல்லம் அரங்கசாமி முதலி 2.மந்திரமூர்த்தி பிள்ளை 3. வைத்தியலிங்கம் பிள்ளை 4.கந்தசாமி ஆசாரி 5.சடைய கவுண்டர் மற்றும் 6.கண்ணமங்கலம் கோவிந்தசாமி செட்டியார் 7.ராமசாமி நாயுடு 8.டேக்சந்த் லாலா 9.லட்சுமையா நாயுடு ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். அனைவரும் சமாதியைத் திறந்து பார்க்க சுவாமிகளின் தேகத்தில் எவ்வித மாறுபாடும் இன்றி அன்று வைத்தது போலவே இருந்தது. நெற்றியில் மட்டும் வியர்வை நீர் துளிர்த்து இருந்தது. அதனை லட்சுமையா நாயுடு துடைக்கத் துடைக்க மீண்டும் மீண்டும் வியர்வைத் துளி வந்தது. அன்றும் அலங்கார ஆராதனைகள் செய்து சமாதியை மூடும் போது, இதனைக் கேள்வியுற்ற மக்கள் திரளாக வந்து "தாங்களும் அந்த அதியசத்தைக் காண வேண்டும்" என்று வலியுறுத்தினர்.

மாணாக்கர்கள் "மாலை நேரமாகிவிட்டது, மேடை கட்டவேண்டும்" என்று ஒருமித்து சொன்ன பின்பும் மக்கள் விடவில்லை. அந்த நேரத்தில் திடீரென்று பலத்த மழை பொழியத் துவங்க நிற்க இடமின்றி வந்த மக்கள் ஊருக்குத் திரும்பி விட்டனர். மழை நின்றதும் உடனடியாக மேடை கட்டப்பட்டுவிட்டது. மீண்டும் திரும்பி வந்த மக்கள் கூட்டம் 'இனி என் செய்வது' என்று வணங்கிவிட்டு சென்றனர்.

பின்னாளில் ஒரு ஆண்டு விழாவின் போது, நிகழ்ச்சிக்கு வந்திருந்த வேதாந்த சங்கத்தை நிறுவியரும் வேதாந்த தர்க்க போதகருமாகிய கோ.வடிவேல் செட்டியார் அவர்களிடம் சுவாமிகளின் நெற்றியில் வியர்வைத் துளி அரும்பியதைக் குறித்து கேட்ட பொழுது, செட்டியார் "யோக அனுபவம் மிக்கவர்கள் பிராணவாயுவைக் கும்பித்து விட்டு அகண்ட சமாதி செய்வது உண்டு என்றும், சுவாமிகள் யோகம்-ஞானம் இரண்டிலும் சித்தி பெற்றவர் என்பதால் ஜீவசமாதி உற்றார் ஆதலால் அவரது திருவுருவத்தில் எந்த மாறுபாடும் இல்லாமையும், வியர்வைத் தோற்றமும் காணப்பட்டன" என்று விளக்கினார்.

நாளடைவில் மாணாக்கர்கள் ஒவ்வொருவராக மறைந்துபோக, மந்திரமூர்த்தி பிள்ளை மற்றும் வைத்தியலிங்கம் பிள்ளை இருவரும் மடலாயம் கட்டி குடமுழுக்கு செய்து பூசை செய்து வந்தனர். அவர்களுக்குப் பிறகு, கொடையாளர் அண்ணாமலை முதலியார் அளித்த நிதியைக் கொண்டு அச்சுதானந்த நிலையம் என்ற கட்டிடம் கட்டப்பட்டது. பின்னாளில் சுற்றுச்சுவர், மடைப்பள்ளி கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு பூசை தொடர்ந்து செய்யப்பட்டு வருகிறது.

ஸ்ரீ மத் அமலானந்த சுவாமிகள்